தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 41 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 01ஆம் திகதி புதன்கிழமை
(17.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 18 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம்

•யோ.தர்மராஜ்

நல்லாட்சி காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தமிழில் தேசிய கீதம் இசைக்கும் நடைமுறையை மீண்டும் அமுல்படுத்தும்படி கோரியுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

சீனக் கப்பலுக்கு அமோக வரவேற்பு

•நமது நிருபர்

ஆசிய பிராந்தியத்தில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திய சீன உளவுக் கப்பலான 'யுவான் வாங் 5' நேற்றுக்காலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது.

02 பக்கம்

வெங் வென்பின்
சீன வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர்
"சீன உளவுக்கப்பலின் இலங்கை வருகைக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவிப்பது அடிப்படையற்றது"
08.08.2022

எஸ். ஜெய்ஷங்கர்
இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்
"எல்லைப்பகுதியில் அமைதியை சீர்குலைப்பதற்கு சீனா முயற்சிக்குமானால் இரு தரப்பு உறவும் பாதிப்படையும்"
12.08.2022

கன் வெய்டாங்
இந்தியாவுக்கான சீனத் தூதுவர்
"இந்தியாவும் சீனாவும் சாதகமான உறவுக்கு உத்வேகம் கொண்டிருக்கின்றன"
13.08.2022

ரணில் விக்கிரமசிங்க
ஜனாதிபதி
"இலங்கையும் இந்தியாவும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள், வெவ்வேறு பயணங்கள் கிடையாது"
15.08.2022

Infographic : Udesh Selvaraj
© Thamilan Graphic Desk

- 12.07.2022 – இலங்கை வருகைக்கு சம்மதம் தெரிவித்து கடிதம்
- 13.07.2022 – சீனாவிலிருந்து புறப்பாடு
- 11 – 17.08.2022 – ஹம்பாந்தோட்டையில் தரித்து நிற்க அனுமதி
- 06.08.2022 – கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறு கோரிக்கை
- 10.08.2022 – வேகத்தை குறைத்து பயணம்
- 12.08.2022 – ஹம்பாந்தோட்டையிலிருந்து 620 மைல் தூரத்தில் தரிப்பு
- 13.08.2022 – இலங்கை எல்லைக்குள் வர அனுமதி
- 16.08.2022 – ஹம்பாந்தோட்டை வருகை
- 16 – 19.08.2022 – துறைமுகத்தில் தரிப்பு

2017- ஹம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டது.

YUAN WANG 5

உரிமம் : சீனா
பயன்பாடு : உளவு, செய்மதி கண்காணிப்பு, ஏவுகணை வேவு பார்த்தல், இதர தொழில்நுட்ப செயற்பாடுகள்
உருவாக்கம் : 2007
எடை : 22,686 தொன்
நீளம் : 222 மீ.
அகலம் : 25.2 மீ.
உளவு பார்க்கும் தூரம்: 750 கி.மீ.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு சீனா முயற்சித்ததில்லை

உளவுக் கப்பலை வரவேற்று விமல் வீரவங்ச உரை

02 பக்கம்

சீனாவை ஒருபோதும் வேறுபடுத்த முடியாது

ஹம்பாந்தோட்டையில் சரத் வீரசேகர தெரிவிப்பு

02 பக்கம்

சீனக் கப்பல் தொடர்பில் தேவையற்ற குழப்பங்கள்

அமெரிக்கா போன்ற நாடுகளால் உருவானதாக வாசு குற்றச்சாட்டு

02 பக்கம்

ஜெனீவா விவகாரம்; ஆராய விசேட குழு!

ஜனாதிபதி ரணில் நியமிப்பு

•யோ.தர்மராஜ்

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஜெனீவா கூட்டத்தொடரில் எவ்வாறான விடயங்கள் பேசப்பட வேண்டும், கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்கு இலங்கையில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது குறித்து ஆராய்வதற்கு அரசாங்கத்தினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ உள்ளிட்டோர் அங்கம் வகிக்கின்றனர்.

இம்முறை ஆரம்பமாகவுள்ள ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு கடும் நெருக்கடிகள் ஏற்படலாம் என பல தரப்புகளும் கட்டிக்காட்டியுள்ள நிலையில், அக்கூட்டத்தொடரை எவ்வாறு எதிர் கொள்வது என்பதை ஆராயும் நோக்கிலும், அதற்காக இலங்கையில் விரைவில் முன்னெடுக்கக்கூடிய செயற்பாடுகள் என்னவென்பது குறித்தும் இக்குழு ஆராயும் என தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர், ஜெனீவா கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இலங்கை அரசு புதிய ஜனாதிபதியின்கீழ் எடுத்துள்ள நடவடிக்கைகளையும்...

02 பக்கம்

ஸ்கொட்லாந்து யுவதியின் மனு நிராகரிப்பு

இலங்கையிலிருந்து தன்னை நாடு கடத்துவதற்கு குடிவரவு - குடியகல்வு திணைக்களம் எடுத்த தீர்மானத்தை இரத்துசெய்யுமாறு கோரி, ஸ்கொட்லாந்து யுவதி கெய்லி பிரேசர் தாக்கல்செய்த ரிட் மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விசாரணையின்றி நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோமித ராஜகருணா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

02 பக்கம்

உயர்பதவி நியமனத்துக்கு முன் அனுமதி அவசியம்

விசேட குழுவை நியமித்தார் ரணில்

•நமது நிருபர்

அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளில் புதிய நியமனங்கள் அல்லது மாற்றங்களுக்கு முன் அனுமதி பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்று நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையிலான குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க, அமைச்சரவை செயலாளர் டபிள்யூ.எம்.டி.ஜே. பெர்ணான்டோ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் செயலாளராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பொது நிறுவனங்கள், சபைகள், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் பதவிகளை மாற்றுவது அவசியமானால், நியாயமான காரணங்களுடன் மேற்கண்ட குழுவிடம்...

02 பக்கம்

அரசின் சிறப்புரிமைகளை பயன்படுத்தும் கோட்டா!

•யோ.தர்மராஜ்

கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் சிறப்புரிமை கொண்டவராகக் காணப்படுகிறார். அதனடிப்படையில் அந்த சிறப்புரிமைகளை அவர் பயன்படுத்துவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் தினைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, முன்னாள் ஜனாதிபதி பயணித்த விமானத்துக்கு நிதி செலுத்தப்பட்டமை...

02 பக்கம்

முதலீடுகளைப் பெறும் நோக்கில் தடை நீக்கம் செய்யப்படவில்லை

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் குறித்து அரசு அறிவிப்பு

•யோ.தர்மராஜ்

நாட்டுக்கு தேவையான முதலீடுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் புலம் பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடை நீக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகளின் கொள்கைத் தீர்மானத்துக்கு மதிப்பளிக்கும் வகையில், தொடர் கண்காணிப்புகளுக்கு...

02 பக்கம்

நாட்டின் கடன் பிரச்சினைகளை தீர்க்க வழிமுறைகள் உள்ளனவா?

முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்கிறார் பந்துல

•யோ.தர்மராஜ்

சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாது கடன் மறுசீரமைப்புக்கான வழிமுறைகளையும், கடன் செலுத்தாதபோது எங்களுக்கு எதிராக பல நாடுகள் தாக்கல் செய்யும் வழக்குகளை எதிர்கொள்வதற்கான...

02 பக்கம்

உஷ்

ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்த சீனக்கப்பலை வரவேற்கச் சென்ற எம்.பிக்கள் குழுவில் இருந்த சரத் வீரசேகர எம்.பி. கைலாகு கொடுக்க முயன்றபோது அப்படிச் செய்ய மறுத்துவிட்டாராம் கப்பலின் கெப்ரன் சங் ஹொங்வங். அதேபோல கப்பலுக்குள் நுழையவும் எம்.பிக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாம். வெளியில் சில பகுதிகளை பார்க்க மட்டுமே அனுமதிக்கப்பட்டதாக தகவல்.

சிறார்களை துஷ்பிரயோகப்படுத்தி காணொளி வெளியிட்ட மதகுரு

கைதாகுவதை தடுக்க ரூ.10 கோடி இலஞ்சம் கொடுக்க முயற்சி

பாடசாலை சிறார்களை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி, அதை காணொளியாக படம் பிடித்து விற்பனைசெய்த குற்றச்சாட்டின் பேரில் கானி, உனவடுன, மாதரம்ப பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ள மதகுரு, தான் கைதாவதைத் தடுக்க ரூ.10 கோடிவரை இலஞ்சம் கொடுக்க முன்வந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வளவு பெரிய தொகையை இலஞ்சமாக கொடுக்க அவரிடம் கோடிக்கணக்கான பணம், சொத்துகள் எப்படிக் கிடைத்தன என்று அறிய, சட்டவிரோத சொத்துக் குற்றவிசாரணைப் பிரிவினர் விரிவான விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

02 பக்கம்

இலத்திரனியல் முச்சக்கரவண்டிகளை இலங்கையில் அறிமுகப்படுத்தும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்ட அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் கொழும்பில் பரீட்சார்த்த பயணத்தை மேற்கொண்டனர்.

கமெண்ட் கந்தர்..

கப்பலை வரவேற்க பல் பிடிச்சு போன பார்லிமென்ட் எம்.பிமாரை வச்சுக்கொண்டு எப்படி பாருங்கோ நாட்ட முன்னேத்திறது..?



சுதந்திர தினத்தில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தில் சுதந்திர தின ஏற்பாடுகள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த விடயம் வலியுறுத்தப் பட்டதாக ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது,

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தற்போதைய ஜனாதிபதியின் நல்லெண்ண வெளிப்பாடாக சுதந்திர தினத்தில் தேசிய கீதம் தமிழிலும் பாடப்பட்டமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்திலும் அந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கடற்றொழில் அமைச்சரின் குறித்த வேண்டு கோள் அமைச்சரவையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பன்மைத்துவம் சமத்துவம், சம உரிமை போன்றவை கடந்த காலங்களில் கொள்கையளவில் மாத்திரம் இருந்தமையும் நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு காரணமாக இருந்தது என்பதை சுட்டிக்காட்டியதுடன், எதிர்காலத்தில் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் மனப்பூர்வமாக உணர்ந்து கொள்ளும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாட்டின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்படும். அதில் எவ்வித பிரச்சினையுமில்லை என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (16) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, எதிர்வரும் சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்படுமா என்பது குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்கொட்லாந்து யுவதியின்...

'கோட்ட கோ கம' போராட்டக்களத்தில் தான் தீவிரமாக செயற்பட்டதாக மனுதாரர் முன்பு குறிப்பிட்டிருந்தார்.

பின்னர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தனக்காக வழங்கப்பட்ட விசாவை தன்னிச்சையாக இரத்துச் செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத் தினால் எந்தவொரு நியாயமான அடிப்படை யும் இன்றி எடுக்கப்பட்ட தீர்மானம் சட்டவிரோத மானது என தீர்ப்பளித்து செல்லுபடியற்ற ஆணை பிறப்பிக்குமாறு மனுதாரர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

சீனக் கப்பலுக்கு...

உயர்தொழில்நுட்பம் கொண்ட இந்தக் கப்பலுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளித்த தையடுத்து, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

இந்தக் கப்பல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள் ளது.

யுவான் வாங் - 5 கப்பல் இலங்கை நோக்கி வருவதற்கு இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டி ருந்தது.

ஏற்கனவே இம்மாதம் 11 ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை ஹம்பாந்தோட்டையில் தரித்து நிற்க அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதிலும் இந்தியாவின் எதிர்ப்பு காரணமாக, கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறு இலங்கை அரசாங்கம் சீனாவை கோரியது.

இதனடிப்படையில் மிகக் குறைவான வேகத்தில் பயணித்த கப்பல் இலங்கை கடல் எல்லையிலிருந்து சுமார் 650மைல் தொலைவில் நங்கூரமிட்டிருந்தது. இந்நிலையில் இலங்கை அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக அனுமதியளிக்கப்பட்ட நிலையில் நேற்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது.

அரசின் சிறப்புரிமைகளை...

குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு கிடைக்கும் சிறப்புரிமைகளுக்கு அமையவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் வாழ்கின்றார்.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் சட்டமூலத்துக்கு அமைய, முன்னாள் ஜனாதிபதிக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் கிடைக்கும் சிறப்புரிமைகள் தொடர்பில் சட்டத்திட்டங்கள் இருக்கின்றன.

சில நேரங்களில் மரணத்துக்கு பின்னரும் ஜனாதிபதியின் மனைவிக்கு அவருக்கு போன்றே பாதுகாப்பு வழங்குவதற்கு பொறுப்புள்ளது. மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச உயிரிழந்த பின்னர், அவருடைய மனைவிக்கு தற்போதும் முன்னாள் ஜனாதிபதிக்கான சிறப்புரிமைகள் வழங்கப்படுகின்றன – என்றார்.

ஜெனீவா விவகாரம்:...

எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள செயற்பாடு களையும் விளக்கி, அதற்கான உத்தரவாதத்தை அங்கு வழங்குவார் என அறிய முடிந்தது.

ஜெனீவா கூட்டத்தொடருக்கு முன்னர் வட, கிழக்கில் இராணுவ வசமுள்ள காணிகளை விடுவித்தல் மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தமிழ்த் தரப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. இந்த நிலையில், இராணுவத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகள், எதிர்காலத்தில் இராணுவ முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கப்படவுள்ள காணிகள் குறித்தும் இராணுவ வசமுள்ள தனியார் காணிகள் மற்றும் அரச காணிகள் குறித்தும் விரிவான தகவல்களை உடனடியாக தருமாறு பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளதாகவும் அறிய முடிந்தது.

அதன்படி, ஜெனீவா கூட்டத்தொடருக்கு முன்னர் அநாவசியமாக படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தயாராகி வருவ தாகவும் அறிய முடிந்தது.

இதேவேளை, சிறையிலுள்ள அரசியல் கைதிகளின் முழு விபரத்தையும் தருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார். இவருடைய கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன், சிறையிலுள்ள கைதிகளின் பெயர்கள், அவர்கள் எப்போது கைது செய்யப்பட்டனர், தற்போது எந்த சிறையிலுள்ளனர் என்ற முழு விபரத்தையும் வழங்கியுள்ளதுடன், அத் தகவலை ஆராய்ந்துள்ள நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, முழு விபரமும் சரியானது என ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிந்தது.

அதன்படி, ஜெனீவாவுக்கு முன்னர் அரசியல் கைதிகளின் பலர் விடுதலை செய்வதற்கான வாய்ப்புகள் காணப்படுவதோடு, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு அல்லது அதனை ஜெனீவாவில் விளக்கிக்கூறுவதற்கும் வாய்ப்புள் ளதா என்பது குறித்தும் ஆராயுமாறு ஜனாதிபதி நீதி அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

முதலீடுகளைப் பெறும்...

பின்னர் இவ்வாறான தடை நீக்கம் முன்னெடுக் கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (16) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, நாட்டுக்கு தேவையான முதலீடுகளை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பிலா புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டது? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆறு தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்கியமையானது நாட்டுக்குத் தேவையான முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கானது என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அது ஒவ்வொருவரின் தனிப்பட்ட கருத்தாகும்.

1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டவிதிகளுக்கமைய, பாதுகாப்பு அமைச்சினால் பயங்கரவாதம் மற்றும் பயங்கரவா தமல்லாத அமைப்புகள் மீதான தடை அல்லது தடைநீக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி, கடந்த காலங்களில் தடை செய்யப் பட்டிருந்த 6 தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கொள்ளை தீர்மானத்தின் 1373இன் கீழ் இந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உலகத்தமிழ் பேரவை, பிரித்தானியத் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் பேரவை, அவுஸ்திரேலியத் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் ஈழ மக்கள் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஆகியவற்றின் மீதான தடை நீக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் குறித்த அமைப்புகளின் செயற்பாடுகளை தொடர்ந்து அவதானித்து முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமை யவே, இந்த தடை நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் கொள்கை தீர்மானத்துக்கு மதிப்பளிக்கும் வகையிலேயே தொடர் கண்காணிப்புகளுக்கு பின்னர் இவ்வாறான தடை நீக்கங்கள் முன்னெடுக் கப்படுகின்றன.

இவ்வாறு 6 அமைப்புகளின் மீதான தடை நீக்கப் பட்டுள்ளதுடன், புதிதாக மூன்று அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது – என்றார்.

உயர்பதவி நியமனத்துக்கு...

பரிந்துரைகளை சமர்ப்பித்து முன் அனுமதி பெறுவது கட்டாயமாகும்.

தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழுவின் பதவிகளை அவ்வப்போது மாற்றுமாறு அடிக்கடி ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்ட எழுத்துமூல கோரிக்கைகள் மற்றும் சில முறைசாரா நியமனங் கள் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலாளரின் கையொப்பத்துடன் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் நேரடியாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்கான பிரதிகள் பிரதமரின் செயலாளர் மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிள்ளைக்கு பால் மா திருடியவர் கைது!

அளுத்கம பகுதியில் குழந்தைக்கு உணவில்லா ததால் பல்பொருள் அங்காடியில் பால் மா திருடி யவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நீடிக்கிறது. குறிப்பாக மண்ணெண்ணெய் விநியோகம் பல மாதங்களாக சிக்கலான நிலைமையில் உள்ளது. இதனால் மீனவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகி வருகிறார்கள்.

இந்நிலையில், 30 வயதான மீனவர் ஒருவரே பிள்ளைக்காக பால் மா திருடி கைதாகியுள்ளார்.

அவருக்கு 02 பிள்ளைகள். இளைய பிள்ளை ஒன்றரை வயதுடையவர்.

பல்பொருள் அங்காடியில் 3ஆயிரத்து 100 ரூபா பெறுமதியான பால் மா ஒன்றை திருடியுள்ளார். நிறுவன ஊழியர் மூலம் கைதான சந்தேகநபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அரசாங்கத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரத்துறை தொழிற்சங்கத்தினரால் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று (16) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

சீனக் கப்பல் தொடர்பில்...

யோ.தர்மராஜ்

வேறு பலமிக்க நாடுகளைபோன்று சீனா எந்தவொரு நாட்டையும் தனக்கு கீழ் கொண்டுவரும் வகையில் செயற்பட்டதில்லை. சீனக்கப்பல் தொடர்பில் தேவையற்ற குழப்ப நிலைமை அமெரிக்கா போன்ற நாடுகளால் உருவாக்கப்பட்டதென முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு நேற்று காலை வருகைதந்த சீன இராணுவத்தின் யுவான் வாங் - 5 கப்பலுக்கு உத்தியோகபூர்வ வரவேற்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவின் யுவான் வாங் - 5 கப்பல், இலங்கைக்கு வருகைதந்ததானது, இலங்கையின் சுதந்திரம் மற்றும் சுயாதீனத்தின் அடையாளமாகும். கப்பல் தொடர்பில் தேவையற்ற குழப்ப நிலைமை உருவாகியது. அவை அமெரிக்கா போன்ற உலக நாடுகளினால் உருவாக்கப்பட்டதாகும். ஆனால், நாங்கள் சரியான முடிவை எடுத்தோம்.

இரு நாடுகளுக்கும் இருக்கும் நீண்டகால நட்புறவுக்கு வேறு நாடுகளின் அழுத்தத்தால் எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது. தற்போது அமைதியான நாடுகளுக்கு பலம்மிக்க பல நாடுகளின் அழுத்தங்கள் இருப்பதை எங்களால் காணக்கூடியதாகவுள்ளது.

ஆனால், 100 வருடங்களுக்கு மேலாக சீனா அவ்வாறு எந்தவொரு நாட்டையும் தங்களுக்கு கீழ் கொண்டுவரும் வகையில் செயற்பட்டதில்லை. சீனாவின் கொடி தொடர்ந்தும் சுதந்திரமாக இருப்பதால் இலங்கை கொடியுடன் தொடர்ந்து சுதந்திரமாக எழ முடியும் - என்றார்.

சிறார்களை...

இலஞ்சத்தை ஏற்காமல், அழுத்தமின்றி இரகசியப் பொலிஸார் செயற்பட்ட விதம் பாராட்டுக்குரியது எனவும், சந்தேகத்திற்குரிய மதகுரு கைது செய்யப்பட்டதன் பின்னர் அவர் இரகசியமாக சம்பாதித்துள்ள சொத்துகள் தொடர்பிலும் பொதுமக்கள் தொடர்ந்து தகவல்களை வழங்கி வருகின்றமை பாராட்டத் தக்கது என்றும் பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத் திடம் சந்தேகநபரான மதகுரு பயன்படுத்திய பல கையடக்கத் தொலைபேசிகள் உள்ளதாகவும், டிஜிட்டல் தடயவியல் கணினிப் பிரிவு அந்த தொலைபேசிகளின் தரவுகளைக் கண்காணித்து வருவதாகவும், அந்தத் தரவுகளின் அடிப்படையில் அவருடன் தொடர்பில் இருந்த உயர் பொலிஸ் அதிகாரிகளின் பட்டியல் தெரியவரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலி பிரதேசத்தில் பணிபுரியும் உயர் பொலிஸ் அதிகாரிகளும், காலி பிரதேசத்தில் இருந்து இடமாற்றம் பெற்று, பதவி உயர்வு பெற்று வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்ட அதிகாரிகளும் மதகுருவுடன் தொடர்பில் இருந்ததாக சந்தேகிக்கப் படுகிறது.

மேலும், இந்த கோயிலுக்கு சில காலமாக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், காரணமின்றி வழங்கப்பட்ட பாதுகாப்பு குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பிரதேசத்தில் மதகுருவினால் கொள்வனவு செய்யப்பட்ட பல சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகள் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதுடன், அவ்வாறான வீடுகளை கொள்வனவு செய்வதற்கு பெருந்தொகை பணத்தை எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்றும், வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் அவர் மேற்கொண்ட பரிவர்த்தனைகள் குறித்தும் ஆராய்வதாகவும் அவர் கூறினார்.

சீனாவை ஒருபோதும்...

யோ.தர்மராஜ்

நாங்கள் சீனாவை ஒருபோதும் வேறுபடுத்த முடியாது. நம்பிக்கைக்கொண்ட நண்பனாகும். எங்களுடைய நீண்டகால நண்பனாக உள்ள சீனா, கடன் மறுசீரமைப்புச் செய்வதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களை வெற்றிக்கொள்வதற்கும் எங்களுக்கு விரைவில் உதவ வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என முன்னாள் அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்த சீன இராணுவத்தின் யுவான் வாங் - 5 கப்பலுக்கு உத்தியோகபூர்வ வரவேற்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில், யுவான் வாங் - 5 கப்பலின் கெப்டன் மற்றும் அதிகாரிகள் குழுவை அன்புடன் வரவேற்கின்றேன்.

சுதந்திரத்துக்கு பின்னர் இலங்கை தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் நீண்டகால பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் சர்வதேச நட்பு நாடுகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் எமக்கு முக்கியம்.

இந்த நிலையில், எங்களுடைய நீண்டகால நண்பனாக உள்ள சீனா, கடன் மறுசீரமைப்புச் செய்வதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களை வெற்றிக்கொள்வதற்கும் எங்களுக்கு விரைவில் உதவ வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, விரைவில் நிதியுதவிகளையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இலங்கை, சீனா மற்றும் இந்தியா ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு மற்றும் பலம் என்பவற்றை உலக நாடுகள் புரிந்துகொள்ளவில்லை. இந்த மூன்று நாடுகளும் அபிவிருத்தி மற்றும் உலக தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு, புத்தசாசனம், சந்தை, உதவிகள் ஆகியவற்றின் ஊடாக தொடர்புகளை வலுப்படுத்த வேண்டும்.

இந்து சமுத்திரத்தை பலப்படுத்துவதற்கு ஆசிய நாடுகள் ஒன்றிணைய வேண்டும். நாங்கள் சீனாவை ஒருபோதும் வேறுபடுத்த முடியாது. நம்பிக்கைக்கொண்ட நண்பனாகும் - என்றார்.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு...

யோ.தர்மராஜ்

எங்களுடைய அரச வியூகங்கள் எவ்வாறிருக்க வேண்டும், நாம் எதனைச் செய்ய வேண்டும், எவ்வாறான ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என எமக்கு ஒருபோதும் சீனா அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை. இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களை நிறுவி, அவற்றுக்கு நிதி வழங்கி ஆட்சிக் கவிழ்ப்புகளை மேற்கொள்ள சீனா செயற்பட்டதில்லையென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு நேற்று காலை வருகைதந்த சீன இராணுவத்தின் 'யுவான் வாங் - 5' கப்பலுக்கு உத்தியோகபூர்வ வரவேற்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த பூமி இலங்கையுடையதாக இருந்தாலும், கடலே எங்களை உலகத்துடன் இணைக்கின்றது. இந்த பிராந்தியத்தில் சுயாதீனத்துக்கான வரையறைக்குள் எங்களுக்குள்ள உரிமையை நாங்கள் நிறைவேற்றுவோம். இந்து சமுத்திர பிராந்தியம் அமைதியான பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம். இது முரண்பாட்டு பிராந்தியமாக அல்லது எதிரிகளின் பிராந்தியமாக இருக்கக்கூடாது என நினைக்கின்றோம்.

நாங்கள் பொருளாதார ரீதியில், பலமாக அல்லது வீழ்ச்சியடைந்து இருந்தாலும் எங்களு டைய கொள்கையில் கடுமையாக இருந்தோம். இதனாலேயே, எல்லோரும் கூறும் உளவுக் கப்பல், நாங்கள் கூறும் தொழில்நுட்ப கப்பலுக்கு அனுமதி வழங்கியதுபோன்று, இலங்கைக்குள் வந்து ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமி டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தோம்.

சீனா எம்முடன் நீண்டகாலமாக நட்புறவைக் கொண்டுள்ளது. நாம் பொருளாதார ரீதியில் விழுந்துள்ள சந்தர்ப்பங்களிலும் எமக்குக் கைகொடுக்கும் நாடுகளில் சீனாவும் ஒன்றாக இருக்கின்றது.

எங்களுடைய அரச வியூகங்கள் எவ்வாறிருக்க வேண்டும், நாம் எதனைச் செய்ய வேண்டும், எவ்வாறான ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என எமக்கு ஒருபோதும் சீனா அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை. இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களை நிறுவி, அவற்றுக்கு நிதி வழங்கி ஆட்சிக் கவிழ்ப்புகளை மேற்கொள்ள சீனா ஒருபோதும் செயற்பட்டதில்லை.

எனவே, இலங்கை தற்போது பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை கொண்டுள்ளபோது, எங்களுக்கு உதவிகளை வழங்கக்கூடிய நாடுகளில் சீனாவும் ஒன்று. எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் கடன்களைவிட முதலீடுகளால் சீனா எமக்கு அதிகம் உதவும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கை அரசாங்கம் வீழ்ச்சியடைந்தால், பாரிய பாதிப்புகளை ஏற்படுத் தும். அவ்வாறிருக்காது, இலங்கை அரசாங்கத்தை பாதுகாத்துக்கொண்டு முன்னோக்கிச்செல்ல எங்களால் முடியும் - என்றார்.

நாட்டின் கடன் பிரச்சினைகளை...

வழிமுறைகளையும் யாராவது முன்வைக்கும் பட்சத்தில் அதனைப் பரிசீலனை செய்ய தயாராகவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (16) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதாயின் சர்வதேச நாணய நிதியத்தின் கொடுக்கல் வாங்கலிலிருந்து வெளியேற வேண்டும் என வாசுதேவ நாணயக்கார முன்வைத்த கருத்து தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கட்சிகளின் கருத்துகளை தவிர, நாங்கள் மற்றொரு விடயத்தை புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேச கொடுக்கல் வாங்கல் முறையிலிருந்து நாங்கள் விடுபடவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது. யார் ஆட்சிக்கு வந்தாலும் பொருட்கள் இறக்குமதி, ஏற்றுமதி யின்றி நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

அதன்படி, நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினராகும். நாங்கள் பிரச்சி னைகளுக்கு முகம் கொடுக்கும்போது, அவர்க ளிடமிருந்து உதவிகளை பெறுவது மற்றும் உறுப்பினர் என்ற வகையில் எங்களுக்கு உதவிகளை வழங்குவது என்பது வரலாற்று ரீதியாக தொடர்ந்தும் இடம்பெறும் இராஜதந்திர செயற்பாடாகும்.

இலங்கை அரசாங்கமும் பலமுறை சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தங்களில் இணைந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அது சில சந்தர்ப்பங்க ளில் தோல்வியடைந்தது. குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முறையாக நிறைவேற்றவில்லை. இந்த நிலையில் வரலாற்றில் முதல் முறையாக கடன் செலுத்தலை ஒத்திவைத்துள்ளோம். எனினும், அதனை நாங்கள் நிராகரிக்க முடியாது. எனவே, சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாது, கடன்களை மீள செலுத்துவதற்கான வழிமுறைகளை அவர்கள் முன்வைத்தால் அதனை பரிசீலனை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

எனினும், எங்களிடம் அவ்வாறான வழிமுறைகள் இல்லாதமையினால் கடன் மீள்சூழ்ச்சிக்கு சர்வதேச நிறுவனங்களின் உதவிகளை பெற்றுக்கொண்டுள்ளோம். கடன் மீள செலுத்தாமையினால் சில நாடுகள் எங்களுக்கு எதிராக வழக்கு தொடரும். அவ்வாறான சந்தர்ப் பத்தில் நாங்கள் நீதிமன்றத்தை எதிர்கொள்ளும் வழிமுறைகளை அவர்கள் முன்வைத்தால் அதனையும் பரிசீலனை செய்ய தயாராக இருக்கின்றோம் - என்றார்.

யுவான் வாங் - 05 என்றழைக்கப்படும் சீன புலனாய்வுக் கப்பல் நேற்று (16) ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பல் மற்றும் அதில் வருகைதந்த பிரதிநிதிகளை வரவேற்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவங்ச, வாசுதேவ நாணயக்கார, சரத் வீரசேகர, அத்துரலியே ரத்ன தேரர் உள்ளிட்ட தரப்பினர் ஹம்பாந்தோட்டைக்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (படப்பிடிப்பு - லலித் பெரேரா)

இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்கம் ஸ்தாபிப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிரீம் (இனிப்புப் பண்டங்கள்) உற்பத்தி செய்யும் கம்பனிகள் (மெலிபன், இட்னா, எலிபன்ட், உல்வத்த, லிட்டில் லயன் உள்வத்த போன்ற நிறுவனங்கள் இணைந்து இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்கத்தை (Lanka Confectionary Manufacturers Association) நிறுவியுள்ளனர்.

இச்சங்கத்தினால் தலைவர் மற்றும் குழு உறுப்பினர்கள் இணைந்து நேற்று முன்தினம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஊடகவியலாளர் மாநாடொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இம்மாநாட்டின்போது, லிட்டில் லயன் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரியும் இச் சங்கத்தின் தலைவருமான எஸ்.எம்.டி.கருணாசுமார தலைமையில் இந்த செய்தியாளர் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் இச்சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் திருமதி சானாஸ் ரஹூப் ஹக்கீமும் கலந்துகொண்டிருந்தார்.

இங்கு கருத்து தெரிவித்த இனிப்புப் பண்டங்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் இந்நாட்டில் பிஸ்கட், இனிப்பு கேக் உற்பத்தியாளர்கள் நிறுவனங்களில் நேரடியாக 5இலட்சத்து 50ஆயிரம் பேருக்கு நாம் தொழில் வழங்கியுள்ளோம். எமது உற்பத்தியான பிஸ்கட், கேக் அதிக விலையானாலும் பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேசியா, மலேசியா போன்ற 50 நாடுகள் எமது பிஸ்கட் சுவையை கவர்ந்துள்ளனர்.

அந்த நாடுகளிலுள்ள பிஸ்கட்டுகளைவிட எமது உற்பத்தி விலை அதிகரித்தாலும் வாங்குகின்றார்கள்.

திடீரென பிஸ்கட் உற்பத்திகள் விலை ஏற்றுவதற்கான முதன்மை காரணம் இலங்கையில் டொலர் பெறுமானம் கூடியது. 4 மாதங்களுக்கு முன் சீனி ஒரு கிலோ 100ரூபா. தற்பொழுது சீனி 320ரூபாவாகும். ஒரு முட்டை 60ரூபா, கோதுமை மா விலையேற்றம், டீசல், பெற்றோல் விலையேற்றம், மின்சாரம் துண்டிப்பு,ளரிபொருள் இல்லாமை அத்துடன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு வங்கிகள் எல்.சி. முறை இல்லாமையாகும்.

பிஸ்கட்டுகளைக்கொண்டு செல்லும் லொறிகள், வேன்களுக்கு டீசல் இல்லாமை, டீசல் விலையேற்றம் போன்ற பாரிய பிரச்சினைகளை முகம்கொடுத்து வருகின்றோம்.

'நமது வரலாற்று ஆளுமைகள்' நூல் வெளியீடு சனியன்று

(பேருவளை நிருபர்)

கலாபூஷணம் லக்கிய சித்தீக் பரீத் எழுதிய 'நமது வரலாற்று ஆளுமைகள்' பகுதி-1 நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9மணிக்கு கொழும்பு, விஜயவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள தபால் தலைமையக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

நவமணி முன்னாள் ஆசிரியரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் தலைவருமான என்.எம். அமீன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர்களான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், கபீர் ஹாசிம், முஜிபுர் ரஹ்மான், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், எஸ்.எம். மரிக்கார், அப்துல் ஹலீம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஷுபீக் ரஜாப்தீன் மற்றும் முன்னாள் ஆளுநர் அசாத்சாலி ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஏ.எம். றஹீயா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்றாஹிம் அன்ஸார் மற்றும் மாத்தளை ஓய்வுபெற்ற அதிபர் புவாஜி ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் ஆய்வுரையை கலாநிதி ரவூப் ஸெய்ன் நிகழ்த்த, நூலின் முதற்பிரதியை பிரபல இரத்தினக்கல் வர்த்தகர் முஸ்லிம் சலாஹுதீன் பெற்றுக்கொள்கிறார்.

மானிய அடிப்படையில் எரிபொருளை வழங்குக

கற்பிட்டி மீனவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

(ரஸீன் ரஸ்மின்)

மானிய அடிப்படையில் எரிபொருளை வழங்கக்கோரி, கற்பிட்டி மீனவர்கள் நேற்று (16) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கற்பிட்டி, பாலக்குடா சந்தியில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கற்பிட்டி, குறிஞ்சிப்பிட்டி, நுரைச்சோலை, கண்டக்குழி மற்றும் பாலக்குடா உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆழ்கடல் மீனவர்கள் கலந்துகொண்டனர்.

எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாலும், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியன இன்றி மீன்பிடித் தொழிலை முன்னெக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இவ்வாறு மீன்பிடித் தொழில் இன்மையால் தமது வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் கடனாளிகளாக இருக்கும் நிலை காணப்படுவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

எனவே, மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு தேவையான மண்ணெண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களை மானிய விலைகளில் உடனடியாக பெற்றுத் தருமாறும் மீனவர்கள் இதன்போது அரசாங்கத்தை வலியுறுத்தினர். அத்துடன், எரிபொருள் மற்றும் மின்சக்தி அமைச்சர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கடும் கண்டனங்களையும் தெரிவித்தனர்.

பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்பிட்டி பாலக்குடா சந்தியில் இருந்து தமது கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு பதாதைகளை ஏந்திக்கொண்டு, கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக சென்று கற்பிட்டி - பாலாவி பிரதான வீதியையும் மறைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனால், கற்பிட்டி - பாலாவி பிரதான வீதியின் போக்குவரத்துகள் சில மணி நேரம் தடைப்பட்டிருந்தன. கற்பிட்டி பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, ஒரிரு வாரங்களுக்குள் கடற்றொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க முடியாமல் போகுமானால், கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளான கற்பிட்டி, உடப்பு மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளுக்கு கடந்த 6ஆம் திகதி கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் மீனவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்படி வாக்குறுதியை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

17 மாதங்களுக்கான 1000ரூபா சம்பளம் நிலுவையில்!

அதனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்து

(பதுளை நிருபர்)

சம்பள நிர்ணய சபையினால் தீர்மானிக்கப்பட்டு, 2021 மார்ச் மாதம் 5ஆம் திகதி அரசின் விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 1000ரூபா சம்பள உயர்வை, உயர் நீதிமன்றமும் அங்கீகரித்ததினால் இதுவரையில் 17மாத காலத்துக்கான நிலுவை சம்பளம், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டுமென விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம். கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

பதுளை தலைமையகப் பணிமனையில் அண்மையில் நடைபெற்ற தோட்ட மட்டத் தலைவர்களடங்கிய கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் மேலும் கூறுகையில், சம்பள நிர்ணய சபையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும்வகையில் நானும் ஒரு உறுப்பினராக இருந்து வருகின்றேன். அந்நிலையில், தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை நாட்சம்பளம் 900ரூபா மற்றும் நிவாரணமாக 100ரூபா என்ற

அடிப்படையில், 1000ரூபா வழங்கப்படல் வேண்டுமென்று சம்பள நிர்ணய சபையில் தீர்மானிக்கப்பட்டது. அவ்விடயம் 2021ஆம் ஆண்டு மார்ச் 05ஆம் திகதி அரசின் விசேட வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது.

இச் சம்பள உயர்வை ஆட்சேபித்து, தோட்டக் கம்பனிகள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. இவ் வழக்கும் நீதிமன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டு, 1000ரூபா நாட்சம்பள உயர்வையும் அங்கீகரித்தது. உயர்நீதிமன்றத்தின் இவ் அங்கீகரிப்பு, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்தமை பெரும் வெற்றியாகும். உயர்நீதிமன்றத்தினால் கிடைத்திருக்கும் அங்கீகாரத்திற்கமைய, 2021-03-05ஆம் திகதி அரசினால் வெளியிடப்பட்ட 1000ரூபா சம்பள உயர்வுக்கான விசேட வர்த்தமானி முதல், இதுவரையிலான 17மாதங்களுக்குமான நிலுவை சம்பளத்தொகை எத்தகைய நிபந்தனைகளுமின்றி தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அன்றைய திகதில் 1000ரூபா சம்பளம் ஓரளவில் போதுமானதாக இருந்த போதிலும், தற்போதைய நிலையில் அச் சம்பளம் எவ்வகையிலும் போதுமானதாக இல்லை.

ஆனாலும், இவ் 1000ரூபா சம்பள உயர்வானது, தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போதைய நிலையில், போதுமானதன்று. நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஆகியவற்றினால் நாட்டின் ஏனைய சமூகங்களை விட, பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

ஆகையினால், வாழ்க்கைச் செலவு உயர்வுக்கமைய, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் 2ஆயிரத்து 500ரூபாவுக்கு மேல் நியாயமான நாட்சம்பளம் என்ற வகையில் அதிகரிக்கப்படல் வேண்டும். இச் சம்பள அதிகரிப்பை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தினரும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இவ்விடயத்தின் யதார்த்தத்தை அனைவருமே உணர்வர். அத்துடன், கூட்டு ஒப்பந்தமும் அமுலுக்குவரும் முன் சம்பள நிர்ணய சபையின் செயற்பாடுகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் பயனைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

ஆகையினால், சம்பள நிர்ணய சபைக்கு மேலும் அதிகாரங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையிலான சரத்துகளை இணைக்கும் வாய்ப்புகளை வழங்கி, தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு, நிவாரணம், சேம நலன்கள், மாதம் 25 தின கட்டாய வேலை ஆகியவற்றை சம்பள நிர்ணய சபை ஊடாகவே வழங்க சட்டத் திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும் என்றார்.

Ruveda™
மூலிகை
அழகுசாதன கிரீம்

இலங்கையிலுள்ள சகலருக்கும் ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளது

சருமம் நிறம் மங்குதல் மற்றும் மடிப்பு ஏற்படுவதை தடுக்கும்

சருமத்தை சூரிய ஒளியில் இருந்தும் தூசியில் இருந்தும் பாதுகாக்கும்

பொலிவான சருமத்தினை தந்திடும்

சேர்மானங்கள், பிளீச் மற்றும் பாதிக்கும் ரசாயனங்கள் அற்றது

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, வீஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஒகஸ்ட் 17ஆம் திகதி, புதன்கிழமை

போதைப்பொருளை ஒழிக்க சமூகத்தின் பொறுப்பு தேவை

தென்மாகாணத்தில் பிரபல சாமியார் ஒருவர், மாணவர்களை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளார் என்ற செய்தி காட்டுத்தீ போல பரவியிருக்கிறது.

மக்களுக்கு பரிகாரமளிக்கும் ஆலயமொன்றை நிர்வகித்து, அப்பகுதி சமூகத்தில் நன்கு அறியப்பட்ட ஒருவராகப் பிரகாசித்து, மாணவர்கள் பலரை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளார் அந்தப் பிரகிருதி. விசாரணை நடவடிக்கைகளைப் பார்க்கும்போது போதைவஸ்து பாவனையும், போதைப்பொருள் வியாபாரமும் இதன் பின்னணியில் இருப்பதாக தெரிகிறது. அதேபோன்று கடந்த சில வாரங்களாக போதைப்பொருள் தொடர்பான குற்றச் செயல்களில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இன்றைய சமூகத்தில் எல்லாவிதமான குற்றச் செயல்களுக்கும் காரணமாக இருக்கும் அடிப்படை விடயம் இந்த போதைப்பொருள் பாவனையாகத்தான் இருக்க முடியும்.

இன்றைய சமூகத்தில் வாழ்கின்றவர்களில் போதைக்கு அடிமையாகாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கின்றது என்றால் வியப்பதற்கில்லை. இன்றைக்கு இப்பழக்கம் இளைஞர்களிடம் அதிகள வில் திட்டமிடப்பட்டுக் கொண்டு செல்லப்படுகிறது. மேற்படி சாமியார் கூட திட்டமிட்டே மாணவர்களை தனது இச்சைக்கு ஆளாக்கியிருக்கிறார்.

நாட்டின் பல இடங்களில் இன்றைக்கு மதுபான சாலைகள் பெருகிவிட்டன. மதுபானம் இன்றைக்கு பெரும் வியாபாரமாக மாறிவிட்டது. இதனால் பல குடும்பங்கள் வறுமையாலும், பல குடும்பங்களில் பிரச்சினைகள் தோன்றவும், நாட்டில் களவு, கொலை, விபத்துகள் இடம்பெறவும், மது பாவனையும், போதைப்பொருள் பயன்பாடும் பிரதான காரணங்களாகும்.

அது மாத்திரமின்றி, பல இளைஞர்கள், குறிப்பாக கல்வி கற்க வேண்டிய சிறுவர்கள் கூட தமது கல்வியை இடைநிறுத்திவிட்டு மதுபாவனைக்கு அடிமையாகித் திரிவதை அவதானிக்கலாம். அதனைப் போலவே "சிகரட், கஞ்சா" போன்ற புகைத்தல் பொருட்கள் பாவிப்பதால் அவர்கள் இளம் வயதிலேயே இதற்கு அடிமையாகி பல குற்றச் செயல்களில் ஈடுபட இதுவும் வாய்ப்பாக அமைகிறது.

சிறுவயதில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவதால் இவர்களின் கல்வி எதிர்காலம், தொழில் வாய்ப்புகள் இல்லாமல் போய் அவர்களை நம்பியுள்ள குடும்பங்களும் வேதனையடைய செய்வதக தபோதைப்பாவனை அமைகிறது. இவ்வாறான போதைக்கு அடிமையான வர்கள் "கொலை, களவு, கொள்ளை, பெண்கள் மீதான வன்முறை" போன்ற வற்றை செய்யும் வன்குணம் கொண்டவர்களாக இன்றைய சமூகத்தில் காணப்படுகின்றனர்.

எமது நாட்டினுடைய வருங்காலத்தைத் தீர்மானிக்க வேண்டிய இளம் சமுதாயத்தினர், கல்வி கற்று நல்ல சமுதாயப் பிரஜைகளாக மாறவேண்டும் என்பதுவே ஒவ்வொரு பெற்றோரினுடைய கனவாகும். அதற்காக அவர்கள் மிகுந்த சிரமப்பட்டு பல தியாகங்களை செய்து தமது பிள்ளைகளை வளர்த்து கல்வி கற்க அனுப்புகின்றார்கள். ஆனால், சமூகத்தில் உள்ள காப்பாளர்களே, இளவயதினர் மீது துஷ்பிரயோகம் செய்து வேலியே பயிரை மேய்ந்தால் எவ்வாறு எதிர்கால நல்ல சந்ததி உருவாகும்?

ஆனால், இன்றைய காலத்து இளைஞர்கள் சிறு வயதிலேயே சில சமூக விரோதிகளான மதுபாவனையில் ஈடுபடும் நண்பர்களோடு சேர்ந்து போதைப்பழக்கத்துக்கு சிறிது சிறிதாக அடிமையாக ஆரம்பித்து போதை இல்லாமல் வாழவே முடியாது என்ற நிலைக்கு அவர்களை கொண்டுபோய் நிறுத்தும் கவலையான பெருமைக்குரியது இந்தப் போதைப்பாவனை.

சாதாரணமாக வருடமொன்றிற்கு உலகளவில் 11.8 மில்லியன் மக்கள் போதைப்பாவனை காரணமான நோய்களால் இறந்து போகின்றனர். 350,000 இறப்புகள் மதுபாவனையால் நிகழ்கின்றன. ஆய்வொன்றின் பிரகாரம் இலங்கையில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போதைப்பொருளுக்கு நிரந்தரமாக அடிமையாகியுள்ளதாக தேசிய போதைத் தடுப்பு சபை எச்சரித்துள்ளது.

போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் 50% திருமணமாகாத இளைஞர்களவர். இவர்களுள் பலர் பல்கலைக்கழகம், உயர்தர, சாதாரண தர மாணவர்களாவர். 45% திருமணமானவர்கள். இதில் 50% முதல் 69% ஆனவர்கள் பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சின் அறிக்கை குறிப்பிடுகிறது.

நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் 43 சதவீதமானவர்கள் மதுவுக்கு அடிமையாகிவிட்டனர். பெருந்தோட்டப் பகுதிகளில் இது 55 சதவீதமாக உள்ளது. பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களில் 18 சதவீதம் பேர் மதுவுக்கு அடிமையாகி உள்ளனர். இது தவிர, இதற்காக அவர்கள் சராசரியாக செலவழிக்கும் பணம் நாளொன்றுக்கு 950 ரூபா முதல் 1000 ரூபா வரையான மதிப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனையில் இலங்கையில் முதலாம் இடமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகின்றது. இது 71% ஆக காணப்படுகின்றது. இரண்டாவதாக கம்பஹா மாவட்டம் காணப்படுகின்றது. இது 22% ஆக காணப்படுகின்றது. மேல் மாகாணமே முதலிடத்தில் காணப்படுகின்றது. நாடளாவிய ரீதியில் 600,000 இற்கு மேற்பட்டவர்கள் கஞ்சா பாவிப்பவர்களாக உள்ளனர். தென்னிலங்கையில் பாதள உலகத்தின் செயற்பாடுகள் மற்றும் கொழும்பு மற்றும் புறநகர்ப் பிரதேசமெங்கும் போதைப்பொருள் பாவனை காரணமாக சமூகம் பேரழிவைச் சந்திக்கும் நிலையே காணப்படுகிறது.

தென்னிலங்கையைப் போன்று வட கிழக்கிலும் போதைப்பொருள் பாவனை கூடிக் கொண்டே போகின்றது. அதுவும் இளம் பருவத்தினரே அதிகமாக போதைக்கு அடிமையாகி வருகின்றனர். கிழக்கில் மறைமுகமாக இடம்பெற்று வந்த போதைப்பொருள் பாவனை இன்று வெளிப்படையாகவே இடம்பெறுவருவதாக பரவலாக குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகளால் நவீன போதைப்பொருட்கள் நாட்டினுள் பிரவேசிக்க ஆரம்பித்துள்ளன. போதைப்பொருள் பாவனை சிறுபராயத்திலேயே ஏற்பட்டு விடுவதால் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக அவர்கள் தனிமையை விரும்பினால், அடிக்கடி பணம் கேட்டால், படிப்பில் நாட்டம் குறைந்தால், நடத்தைகளில் மாற்றம் தெரிந்தால், வழக்கத்திற்கு மாறாக நடவடிக்கை தென்படுமாயின் அவர்களை சற்றுக் கூர்ந்து அவதானிப்பது சாலச்சிறந்தது.

முக்கியமாக இன்றைய இளம் சமுதாயத்தினர் இணையத்தளத்தை தங்கள் உலகமாகக் கருதி வாழ்வதால், அடிக்கடி அவர்கள் பார்க்கும் இணையத்தளங்கள் குறித்து பெற்றோர் விழிப்புடன் இருக்கவேண்டும். இவற்றைத்தவிர சிறுவயதிலிருந்தே கற்றலில் அதிக நாட்டத்தை ஏற்படுத்தல், பத்திரிகை வாசித்தல், விளையாடுதல், இறைவழிபாடு செய்தல் போன்ற பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்தல் சிறந்தது.

பொலிஸார், பொதுமக்கள் தொடர்பு செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் நாடு தழுவிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சமுதாயச் சீரழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். தவறினால் எமது தேசத்தினதும், சமுதாயத்தினதும் எதிர்காலம் பேரழிவுக்குள் தள்ளப்பட்டதாகவே அமைந்து விடும்.

தென்மாகாணத்தில் சிக்கிய சாமியாரை விடுவிக்க பாதுகாப்புத்துறையினர் அழுத்தங்களை வெளியாகியுள்ளன செய்திகூட, இந்த போதை அரக்கனை முற்றாக ஒழித்துவிடவேண்டுமென்ற கடுமையான செய்தியையே சுட்டிநிற்கின்றது. சமூகம் மிகவும் பொறுப்புடனும், விழிப்புடனும் செயற்படவேண்டியது காலத்தின் கட்டாயம்.

முதுமை எல்லோர்க்கும் பொதுமை..

பெற்றோர், முதியோர் நலன் பேணுதல் என்பது நமது பண்பாட்டுக் கூறுகளில் முக்கியமானது.

முதியோர்க்கு செய்யும் மரியாதையை இறை வழிபாட்டிலும் மேலானதாக இலக்கியங்கள் கூறுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக, பெற்றோரைப் பேணல் படிப்படியாகக் குறைந்து வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துவரும் முதியோர் இல்லங்களும், முதுமைக் காலத்தைத் தனியாகக் கழிக்கும் பெற்றோர் நிலையும் மிகுந்த வருத்தம் அளிப்பவையாக உள்ளன.

படித்துப் பட்டம் பெற்று வேலை தேடி வெளியூர்களுக்கோ, வெளிநாடுகளுக்கோ செல்லும் பிள்ளைகள் அங்கேயே திருமணம் செய்துகொண்டு தங்கி விடுவதே இதற்கு முக்கிய காரணம். ஒரு சிலர் பெற்றோரை மறக்காமல் தொடர்பு கொண்டு பணம் அனுப்புவார்கள். ஆனாலும், அவர்கள் வேண்டுவது உணவும், உடையும் அல்ல; உள்ளார்ந்த அன்புடன் அவர்களைப் பேணுவதையே. இவ்வன்பே முதியோர்களுக்கு வலுவைத் தரும்.

சிலரோ பெற்றோரையே மறந்து விடுகின்றனர். அந்த நிலையில் அவர்கள், நல்லுள்ளம் படைத்தோர், தன்னார்வலர்கள் துணை கொண்டு முதியோர் இல்லம் சென்று அடைக்கலம் புகுவதைக் கேள்விப்படுகிறோம். பல இன்னல்களுக்கிடையே தாம் பெற்ற பிள்ளைகளுக்கு கல்வியறிவை ஊட்டி வாழ்க்கையில் முன்னேறப் பாடுபடும் பெற்றோர், முதுமையில் வாழ்வாதாரம் இல்லாமல் கஷ்டப்படுவதைப் பார்க்க மனம் துன்புறுகின்றது.

பெற்றோர்களே வீட்டின் முதல் அங்கம் என்ற எண்ணம் அனைவருக்கும் இருந்தால் நாடு செழிக்கும். வசதி படைத்தவர்கள் ஓரளவு பாதுகாப்புடன் வாழ்கின்றனர். ஆனாலும், அவர்கள் மனத்தில் நிறைவு இல்லை. அரசு முதியோர் நலச் சட்டங்களை இயற்றி, அவர்கள் கண்ணியத்துடன், நிம்மதியாக வாழ வழி ஏற்படுத்தித் தந்தாலும், அது முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை என்பதே உண்மை.

முதுமை என்பது தவிர்க்க முடியாதது. அனுபவம் வாய்ந்தது. ஆற்றல் மிக்கது. குடும்ப அளவிலும், சமுதாய அளவிலும் உடன்பாடு இல்லாமல் வாழ்கின்றவர்கள் முதுமையில் தனித்து வாழும் கொடுமைக்கு உள்ளாவர். எல்லா நலங்களுமே பெற்றும் ஒரு பெண் சமுதாயத்தில் முதுமையில் தனித்து வாழும் நிலைக்குத் தள்ளப்படக் கூடாது என்கிறது வள்ளுவம்.

சக்கரம் போன்றது வாழ்க்கை. ஒருவன் பிறக்கும்போது சக்கரம் சுழல ஆரம்பிக்கிறது என்றால், அந்த சக்கரம் முழுச்சுற்று சுற்றி வரும்போது அவன் ஆயுட்காலம் முடிகிறது. அதற்கு சற்று முற்பட்ட நிலையே முதுமை. எவராயினும் முதுமைக் காலத்தில் படும்பாடு மிகக்கொடுமை. அவர்கள் யாருக்கும் வேண்டாதவர்களாகவே இருக்கிறார்கள்.

பிள்ளைகள் வெளியில் கூட்டுக்குடும்பம் என்று சொல்லிக்கொண்டு வீட்டில் உள்ள பெரியோர்களிடம் பேசாமல் இருப்பது அவர்களை மனதளவில் காயப்படுத்தும் செயல் ஆகும்.

ஏகவது, சொத்துகளை எழுதி வைக்கச் சொல்லி மிரட்டுவது, மறதி நோயால் பாதிக்கப்பட்ட முதியோரை அடித்தல், துன்புறுத்துதல், அவமதித்தல், அவர்களின் பேரக்குழந்தைகளை அவர்களிடம் நெருங்க விடாமல் செய்தல் போன்ற மனம் சார்ந்த கொடுமைகளுக்கு முதியோர் உள்ளாகிறார்கள். இனி நாம் உயிர்வாழ்ந்து பயனில்லை என எண்ணி, தற்கொலை செய்துகொள்ளவும் முற்படுகின்றனர். தனிமையும், புறக்கணிப்பும் சேர்ந்ததால் அந்த எண்ணம் தோன்றுகிறது.

முதுமை எல்லார்க்கும் பொதுமை. நாமும் பின்னர் இந்நிலைக்கு வருவோம் என இளைஞர்கள் எண்ணுவதில்லை. நோய், பாசமில்லா உறவுகள், இயலாமை, தமது தேவைகளுக்காக மற்றவரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஆகியவை முதுமை சந்திக்கும் கொடுமைகள். கையில் பணம் இருந்தால் ஓரளவு மதிப்புண்டு. இன்றேல் ஆதரவற்றோர் இல்லங்கள்தான் அவர்களுக்கு அடைக்கலம். தன்னார்வலர்களும், அரசும் ஒத்துழைத்தால் முதியோர், பாதுகாப்பாக முதியோர் இல்லத்தில் காலத்தைக் கழிக்கலாம்.

வளமான முதுமைக்கு எது முக்கியம்? பொருள் வசதி படைத்தவர்கள் நல்ல உடல்நலத்துடன், மனநலத்தையும் பேணிக் காக்க வேண்டும். நடுத்தர வயதிலிருந்தே மற்றவரை அணுகாமல் தன் வேலையைத் தானே செய்து கொள்ளப் பழக வேண்டும். முதுமைக் காலத்தில் அணிகலன்களின் மீது நாட்டம் வேண்டாம். அதுவே ஆபத்தை விளைவிக்கும். பணியாளர்களிடம் நமது பணபலத்தைச் சொல்லுதலைத் தவிர்க்க வேண்டும். அதுவே நமது உயிருக்கு ஊறு விளைவிக்கும் என்பதை அண்மைக் கால நிகழ்வுகள் காட்டுகின்றன.

இளைய தலைமுறையினரின் அன்றாட பணிச்சுமையைப் புரிந்து கொண்டு, தம்மாலியன்ற உதவிகளை முதியோர் செய்தால் குடும்பத்தில் தகராறுகள் வராது. முதுமையில் மனிதர்கள் உறுதுணையாக இருப்பதினும், இளமையில் சேமித்து வைக்கும் சேமிப்பே பக்கபலமாக இருக்கும். பணம் படைத்தவர்கள் பணத்தை முதியோர் இல்லத்தில் கொடுத்து ஓரளவு நிம்மதியாக வாழலாம்.

தம் சொத்துகளை முழுமையாகத் தம் வாரிசுகளுக்குக் கொடுத்துவிட்ட முதியோர் பலர் முதுமையில் அல்லற்படுகின்றனர். தனக்கு வேண்டியதை வைத்துக் கொண்டு எஞ்சியதைத் தம் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம். தவிர்க்க இயலாதது இறப்பு. அதற்கு மருந்தில்லை என்பதை மனத்தில் எப்போதும் கொள்ள வேண்டும். அப்போதுதான் முதுமை என்ற அச்சத்திலிருந்து வெளிவர இயலும்.

முதியோரைப் பேணுவதற்கு பாடசாலைகளில் கற்றுக்கொடுக்க வேண்டும். அதைப் பாடப்புத்தகங்களில் பாடமாகவும் வைக்கலாம். பாடசாலைகளில் இதுகுறித்து ஆவணப்படங்கள் திரையிட்டுக் காட்டலாம். தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலமும், பத்திரிகைகளில் சிறுகதைகள் மூலமும் உணர வைக்கலாம்.

முதியோர் புறக்கணிப்பு பற்றி பொலிஸ்துறைக்கு செய்தி வந்தால் உரிய தண்டனை வழங்கலாம். முதியோர் பாதுகாப்புக் குறித்த பேச்சுப் போட்டிகள் வைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். முதியோர் கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு நாளன்று மட்டுமின்றி, எல்லா நாட்களும் இளைஞர்கள் முதியோரைக் காக்க உறுதிமொழி ஏற்க வேண்டும். ஊர்தோறும் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தினால் இக்கொடுமைகள் ஓரளவு நீங்கி முதியோர் மனமகிழ்வுடன் இருப்பர்.

குழந்தைகளைத் தெய்வத்திற்கு நிகராக நினைப்பது போல முதியோரையும் நினைக்க வேண்டும். நல்லுள்ளம் படைத்த அனைவரும் முதியோர் நலனைக் கருத்தில் கொண்டு பாடுபட்டால், முதியோர் வாழ்வில் வசந்தம் வருவது உறுதி.

தி.வே.விஜயலக்ஷ்மி
(நன்றி - தினமணி)

இன்றைய நாளில்...

★1560 – ஸ்கொட்லாந்தில் கத்தோலிக்கத்துக்குப் பதிலாக சீர்திருத்த கிறிஸ்தவம் தேசிய சமயமாக்கப்பட்டது.

★ 1585 – வால்ட்டர் ரேலியினால் அனுப்பப்பட்ட முதல் தொகுதிக் குடியேறிகள் புதிய உலகத்தில் உரோனோக் தீவில் (இன்றைய வட கரொலைனாவில்) தரையிறங்கினர்.

★ 1668 – உதுமானியாவின் அனத்தோலியாவில் 8.0 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 8,000 பேர் உயிரிழந்தனர்.

★ 1807 –ரொபர்ட் புல்டனின் நோர்ரிவர் நீராவிக் கப்பல் நியூயோர்க் நகரில் இருந்து ஆல்பெனி நோக்கி அட்சன் ஆற்றில் தனது பயணத்தைத் தொடங்கியது. இதுவே உலகின் முதலாவது நீராவிக் கப்பல் பயணிகள் சேவை ஆகும்.

★ 1836 – ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றம் பிறப்பு, திருமண, இறப்புப் பதிவுகளை சட்டபூர்வமாக்கியது.

★ 1918 – போல்செவிக் புரட்சித் தலைவர் மொயிசேய் யூரீவ்ஸ்கி படுகொலை செய்யப்பட்டார்.

★ 1947 – இந்தியாவையும், பாகிஸ்தானையும் பிரிக்கும் ராட்கிளிவ் கோடு வெளியிடப்பட்டது.

★ 1958 – சந்திரனைச் சுற்றும் முதலாவது திட்டமாக அமெரிக்காவின் பயனியர் விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டு 77 வினாடிகளில் அழிந்தது.

★ 1970 – வெனேரா 7 விண்கலம் ஏவப்பட்டது. வேறொரு கோளில் இருந்து (வெள்ளி) வெற்றிகரமாகத் தகவல்களை அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1988 – பாகிஸ்தான் அரசுத்தலைவர் ஜியா-உல்-ஹக் மற்றும் அமெரிக்கத் தூதுவர் ஆர்னல்ட் ராஃபெல் ஆகியோர் விமான விபத்தில் கொல்லப்பட்டனர்.

★ 1999 – வடமேற்கு துருக்கியில் 7.6 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 17,000 பேர் உயிரிழந்தனர்.

★ 2005 – பங்களாதேஷின் 64 மாவட்டங்களில் 300 இடங்களில் ஐநூறுக்கும் அதிகமான குண்டுகள் தீவிரவாதிகளினால் வெடிக்க வைக்கப்பட்டன.

★ 2008 – அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் ஃபெல்ப்ஸ் ஒரே ஒலிம்பிக் போட்டியில் அதிகமான எட்டு தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்தார்.

நக்கல் நமசிவாயம்

இந்தியாவும், இலங்கையும் நாணயத்தின் ரெண்டு பக்கங்கள் என்டு சொல்லுறார் ரணில்..! நாளைக்கு சீனாவும், இலங்கையும் நாணயத்தாளின் இரண்டு பக்கங்கள் எண்டு சொன்னாலும் சொல்லுவார்..!

இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட வீதிகளை பார்வையிட்ட அதிகாரிகள்

நுவரெலியா மாவட்டத்தில் விசேட கவனம்

(தலவாக்கலை செய்தியாளர்)

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக மண்சரிவு, வெள்ளம் மற்றும் நிலவெடிப்பு ஆகிய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புகளை அண்மையில் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் குழுவினர் பார்வையிட்டனர்.

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் நல்லதண்ணி - மஸ்கெலியா வீதி, நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் நுவரெலியா -ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா சந்தியை அண்மித்த வீதி ஆகியவற்றை அதிகாரிகள் பார்வையிட்டனர்.

மண்சரிவு அபாயம் உள்ள வீதிகள், வெள்ளம் மற்றும் நில வெடிப்பு அபாயம் உள்ள வீதிகள் மற்றும் உட்கட்டமைப்புகள் என்பன பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஒய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதத்த ரணசிங்க மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், நுவரெலியா மாவட்ட செயலகம், மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நுவரெலியா மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

16.08.2022 நாணய மாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	138 2082	150 28 6
கனேடியன் டொலர்	163 8 22	177 585
சீன யுவான் (ரென்மின்பி)	40 6038	43 8182
யூரோ	250 43 0	265 4604
ஜப்பான் யென்	1 5582	1 6661
சிங்கப்பூர் டொலர்	146 7374	158 285
ஸ்ரேலிங் பவுன்	317 5087	335 0 03
சுவிஸ் பிரான்ங்	264 1237	282 452
ஐ.அ.டொலர்	246 2645	257 5761

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	846 34 7
குவைட்	குவைட் தினார்	0.065 4258
ஓமான்	ஓமான் றியால்	826 47 7
கட்டார்	கட்டார் றியால்	87 768
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 0164
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 1637

புத்தளம் வெளிவட்ட வீதி அம்மன் ஆலய இரதோற்சவம்

புத்தளம் வெளிவட்ட வீதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய 34ஆவது வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றுதலுடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

உற்சவத்தில் நாளை மறுதினம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு கொழும்பு வீதி, ஐயனார் ஆலயத்திலிருந்து பாற்குடபவனி ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையவுள்ளதுடன், அன்றைய தினம் தீ மிதிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை இரதபவனியும் மாலை கொடியிறக்கமும் அம்பாள் வீதிவலம் வருவதும் இடம்பெறும்.

கிரியைகள் யாவும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ அம்பலவாண் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

நாட்டைக் கட்டியெழுப்ப தொழில்நுட்பப் புரட்சி அவசியம்

அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

நிலவும் பொருளாதார மந்தநிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க அனைத்துத் துறைகளிலும் தொழில்நுட்ப முன்னேற்றம் நிகழ வேண்டும். அது இந்நாட்டின் பாடசாலை கட்டமைப்பிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியால் நாட்டில் தொழிலுட்பப் புரட்சி ஏற்படுத்தப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ஸஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதன்மூலம் ஒவ்வொரு துறையையும் மேம்படுத்தி, நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து மீட்டெடுக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்டம் பெல்மடுல்ல தேர்தல் தொகுதிக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவர் இதனை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்நேரத்தில், நாடு இக்கட்டான சூழ்நிலையில் இருந்தாலும் நிலைமை ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டது. 80களின் பிற்பகுதி மற்றும் 90களின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 200 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டத்தை ஆரம்பித்தார்.

ஆனால், அதன் பின்னர் உருவான தலைவர்கள் குறுகிய அரசியல் நோக்கத்துடன் அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை. ஏதோ ஒருவகையில் ஏற்றுமதி சார்ந்த ஆடைத்தொழில் திட்டம் தொடர்ந்து யெல்படுத்தப் பட்டிருந்தால், இன்று நாம் எதிர்நோக்கும் பொருளாதார மந்தநிலையிலிருந்து இலகுவாக விடுபட்டிருக்க முடியும் - என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெல்மடுல்ல தேர்தல் தொகுதி அமைப்பாளராான சட்டத்தரணி சமித ஆகலக இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்ததோடு, ஏராளமான பிரதேச மக்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

சிறுநீரக நோய்த் தாக்கம் நாவுலவில் அதிகரிப்பு

(கண்டி செய்தியாளர்)

மாத்தளை, நாவுல பிரதேசத்தில் சிறுநீரக நோய் வேகமாக பரவி வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மாத்தளை மாவட்டத்திலுள்ள கோங்கஹவெல பிரதேசம் மற்றும் ஜாபிலி பிரதேச சிரான அதிகாரி பிரிவு போன்றவற்றிலேயே அதிகமான சிறுநீரக நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பிரதேசங்களில் குடிநீருக்குத் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் பல்வேறு நீர்நிலைகளிலிருந்து பெறப்படும் நீரினால் இவ்வாறு நோய்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் பலர் கருத்து தெரிவித்தனர்.

இவ்வாறு 200இற்கும் மேற்பட்டவர்கள் இப்பகுதிகளில் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தெரிவித்தது.

01. இலங்கையில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டி மற்றும் குறைந்தபட்ச தரநியமங்களை அறிமுகப்படுத்தல்

இலங்கையில் வாழ்கின்ற அநாதை, ஆதரவற்ற, கைவிடப்பட்ட, துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிய மற்றும் சட்டப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள பிள்ளைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, உடல் மற்றும் உள ரீதியான நல்விருத்தி போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் கண்காணிப்பின்கீழ் சிறுவர் அபிவிருத்திச் சேவைகள் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டிகள் மற்றும் முதன்மைச் சட்டங்கள் மாகாண மட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும், தேசிய மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டியொன்று இல்லை. அதனால், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான துறைசார்ந்த அனைத்துத் தரப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த நிபுணர்களின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டலின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ள பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரால் ஜனாதிபதி சமர்ப்பித்த இலங்கையில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டி மற்றும் குறைந்தபட்ச தரநியமங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. 2023 பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள 75ஆவது சுதந்திர தின விழா

2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி வருகின்ற 75ஆவது சுதந்திர தின விழா நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக மற்றும் வழிநடத்துவதற்காக கீழ்க்காணும் கட்டமைப்புடன் கூடிய அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

★ ரணில் விக்கிரமசிங்க - ஜனாதிபதி
பாதுகாப்பு, நிதி உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்

★ தினேஷ் குணவர்தன - பிரதமர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

★ டக்ளஸ் தேவானந்தா - கடற்றொழில் அமைச்சர்

★ சுசில் பிரேமஜயந்த - கல்வி அமைச்சர்

★ பந்துல குணவர்தன - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், வெகுசன ஊடக அமைச்சர்

★ அலி சப்ரி - வெளிவிவகார அமைச்சர்

★ விதுர விக்கிரமநாயக்க - புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர்

★ கஞ்சன விஜேசேகர - மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர்

★ டிரான் அலஸ் - பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

03. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புகளுக்காக இலங்கை அரசு மற்றும் நேபாள அரசுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்ளல்

இலங்கை அரசு மற்றும் நேபாள அரசுக்கிடையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புகளுக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதற்காக முன்பிருந்த திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய உற்பத்திகள் இராஜாங்க அமைச்சுக்கு 2021.06.21ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும், குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை இதுவரை கையொப்பமிடவில்லை. இருதரப்பினர் களுக்கிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்பாடுகளுக்கமைய குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்ப மிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04. நாவலப்பிட்டி அல்-சஃபா ஆரம்பப் பாடசாலைக்கு இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியொன்றை ஒதுக்கி வழங்கல்

1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் மீள்கட்டமைத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் நாவலப்பிட்டி அல்-சஃபா ஆரம்பப் பாடசாலை 2013ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்குத் தேவையான கட்டிட வதிகள் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான நாவலப்பிட்டி புகையிரத நிலையத்திற்குரிய பண்டங்கள் களஞ்சியத்தின் மூலம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. தற்போது அப்பாடசாலையின் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் குறித்த கட்டிடம் போதுமானதாக இன்மையால், நிரந்தரமான கட்டிடமொன்றை அமைக்கவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான நாவலப்பிட்டி கொடமுனை கரஹந்துங்கலவில் அமைந்துள்ள 02 ஏக்கர்களைக்கொண்ட காணித்துண்டை பாடசாலைக்காக சட்டபூர்வமாக ஒதுக்கி வழங்குவதற்காக கல்வி அமைச்சர், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்களால் கூட்டாக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. இந்தியாவின் 75ஆவது சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்திற்காக இலங்கை மற்றும் இந்திய அஞ்சல் அதிகாரிகளால் கூட்டாக முத்திரை வெளியிடல்

2022 ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி இந்தியாவின் 75ஆவது சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்திற்கு இணையாக ஜனநாயகம் எனும் தொனிப்பொருளில் இரண்டு நாடுகளின் நாடாளுமன்றங்களை பிரதிபலிக்கின்ற வகையில் எமது நாட்டின் அஞ்சல் திணைக்களம் மற்றும் இந்திய அஞ்சல் திணைக்களத்தால் இரண்டு கொண்டாட்ட முத்திரைகள் வீதம் வெளியிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதேபோல் இரண்டு நாடுகளாலும் வெளியிடப்படும் முத்திரைகளில் 3,000 முத்திரைப் பொதிகளும், 5,000 நினைவுப் பத்திரங்களும், 2,000 முதல் நாள் அட்டைகளையும் பரிமாற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த பணிகளுக்காக இரண்டு நாடுகளின் அஞ்சல் திணைக்களங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. இலங்கை ஊடக தொழில்வான்மை யாளர்கள் நிறுவனத்தை தாபிப்பதற்காக சட்டமூல மொன்றைத் தயாரித்தல்

ஊடகத்துறையில் பணிபுரிகின்ற ஊடகவியலாளர்களின் தொழில்வான்மையை அதிகரிக்கும் நோக்கில் இலங்கை பட்டயம் பெற்ற ஊடக வியலாளர்களின் நிறுவனத்தை தாபிப்பதற்காக 2021.10.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள வழிநடத்தல் குழுவால் குறித்த நிறுவனத்தைத் தாபிப்பதற்கு ஏற்புடைய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் அடிப்படையில் சட்ட வரைஞர் திணைக்களத்தின் மூலம் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கும், இதற்கு முன்னர் முன்மொழியப்பட்டுள்ள இலங்கை பட்டயம் பெற்ற ஊடகவியலாளர் நிறுவனம் எனும் பெயருக்கும் பதிலாக முன்மொழியப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் இலங்கை பட்டய ஊடக தொழில்வான்மையாளர்கள் நிறுவனம் எனத் திருத்தம் செய்வதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

07. இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை நிறுவுதல்

இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை நிறுவுவதற்காக 2013.08.29 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான சட்டமூலம் சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எபோட்ஸிலி கழுகுவத்தைப் பிரிவில் தொடர் லயன் குடியிருப்பில் தீ விபத்து

ஆறு வீடுகள் பகுதியளவிலும் ஒரு குடியிருப்பு முற்றாகவும் சேதம்

(எம்.கிருஸ்ணா)

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எபோட்ஸிலி தோட்ட கழுகுவத்தைப் பிரிவில் தொடர் லயன் குடியிருப்பில் நேற்றுக்காலை (16) ஏற்பட்ட தீவிபத்தில் ஆறு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன., ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைவேளையில் குறித்த குடியிருப்புகளில் உள்ளவர்கள் வேலைக்குச் சென்றிருந்தமையினால் உயிராபத்துகள் எதுவும் ஏற்படவில்லை. எனினும், குறித்த பகுதியில் உள்ள மக்கள் மற்றும் தீயணைப்புப் பிரிவினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

24 இருபக்க குடியிருப்புகளைக் கொண்ட லயன் குடியிருப்பிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த வீடுகளில் ஏற்பட்ட சேதத்தினால் பெரும் எண்ணிக்கையிலான பொருட்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இதன்போது பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிக இடங்களில் தங்கவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மண்சரிவு காரணமாக தொடர்ந்து 14 நாட்களாக மூடப்பட்டுள்ள மஸ்கெலியா – நல்லதண்ணி வீதி

(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மாகாணத்தில் கடந்த சில வாரங்களாக பெய்த கடும் மழை காரணமாக மஸ்கெலியா – நல்லதண்ணி பிரதான வீதியில் மோகினி எல்லைப்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு, பாதை வெடிப்புகள் காரணமாக இவ்வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

தற்போது மழையில்லாவிடினும் தொடர்ந்தும் இந்தப் பகுதிகளில் மண்சரிவு அபாயமும் காணப்படுவதனால் மக்கள் அச்சத்துடன் உள்ளனர்.

இந்நிலையில், இப்பாதை ஊடாக நடந்து செல்வதும் மிக ஆபத்தானதாக மாறியுள்ளதால் இந்தப் பகுதியில் வசித்து வரும் பாடசாலை மாணவர்கள் உட்பட மக்கள் பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் தொடர்ந்து இவ்வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.



''வருங்கால தலைமுறைக்கு நாம் பயன்படுத்தும் கொங்ரீட் பாதைகள் மற்றும் படிகளை சரியான முறையில் பராமரித்து கொடுப்போம்'' எனும் தொனிப்பொருளின் கீழ் பிரவுன்லோ இளைஞர் அணியின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) பிரவுன்லோ பிரதேசத்தில் சிரமதானம் ஒன்று இடம்பெற்றது. இதில் பிரதேச இளைஞர்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்குபற்றினர். (படங்கள் - மஸ்கெலியா நிருபர்)

ஹட்டனில் அதிக பணம் அறவிடும் முச்சக்கரவண்டி சாரதிகளால் சிரமம்

பிரதேசவாசிகள் குற்றச்சாட்டு

(மஹுர சுதத் செல்வேஹர)

ஹட்டன் நகரைச் சேர்ந்த சில முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் அதிகளவில் பணம் அறவிடும் நடவடிக்கையால் பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் பிரதேசவாசிகள் கருத்து தெரிவிக்கையில், ஹட்டன் நகரில் சில முச்சக்கரவண்டி சாரதின் நியாயமற்ற முறையில் தொகையை அறவீடு செய்வதால் மிகவும் சிரமத்தை எதிர்கொள்கிறோம்.

சாரதிகள் முதல் கிலோ மீற்றருக்கு 200 முதல் 250ரூபா வரையிலும், கடுல் கிலோ மீற்றருக்கு தலா 150ரூபா வரையிலும் வசூலிக்கின்றனர்.

மேலும், இரவு நேரங்களில் இயக்கப்படும் முச்சக்கரவண்டிகளுக்கு இதைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு கட்டணம் வசூலிக்கின்றனர்.

ஒரு சில சாரதிகள் மிகவும் நியாயமான முறையில் பணம் அறவிடுவதாகவும், சில சாரதிகளின் செயற்பாடுகளினால் முச்சக்கரவண்டியில் பயணிப்பதற்கு மிகவும் அச்சமடைந்துள்ளதாகவும் அந்த மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியாவில் தனியார் பஸ் சாரதிகள் பணிப்பகிஷ்கரிப்பு

(நுவரெலியா மேலதிக நிருபர்)

உரியமுறையில் டீசல் வழங்குமாறு கோரி நுவரெலியாவில் தனியார் பஸ் சாரதிகள் (16) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நுவரெலியா மாவட்டத்தில் தனியார் பஸ் சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்தன.

தற்போது தனியார் பஸ்களுக்கு அந்தந்த மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் ஊடாக டீசல் வழங்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இதற்கமைய, நுவரெலியாவில் இ.போ.சபையில் தனியார் பஸ்களுக்கு 4ஆயிரம் ரூபாவுக்கு வழங்கவேண்டிய டீசல்

2ஆயிரத்து 500ரூபாவுக்கு மாத்திரம் வழங்குவதாக தெரிவித்தும் மிகுதியான ஆயிரத்து 500ரூபாவுக்கான டீசலினை உரிய முறையில் வழங்கவேண்டுமெனக்கோரி தனியார் பஸ் சாரதிகள் இந்த பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களையும் போக்குவரத்திற்கு அனுமதிக்காது, தனியார் பஸ் சாரதிகள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சுமார் மூன்று மணித்தியாலங்களின் பின்னர் நுவரெலியா பொலிஸாரின் தலையீட்டால் உரிய முறையில் டீசல் பெற்றுத்தருவதாக கூறியதன் பின்னர் பகிஷ்கரிப்பினை கைவிட்டு வழமைபோல் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற திருவள்ளுவர் விழா

(மன்னார் நகர் நிருபர்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டுதலில் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த திருவள்ளுவர் விழா நேற்று (16) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ராள்ன் டிமெல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரமஇ விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா ஆகியோர் கலந்துகொண்டதோடு, பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆரம்ப நிகழ்வாக திருவள்ளுவர் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மாவட்ட செயலக பிரதான வீதியூடாக திருவள்ளுவர் சிலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

திருக்குறள் நடனம், சிறப்பு சொற்பொழிவு, குறள் வழி நாடகம், திருவள்ளுவர் புகழ் பாடும் கோலாட்டம், சிறப்புக் கவியரங்கம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

புங்குடுதீவில் நாயை கொடூரமாக கொலைசெய்தவர் பொலிஸில் சரண்

பிணை வழங்க மறுத்த நீதிமன்று கட்டுக்காவலில் வைக்க உத்தரவு

(யாழ். நிருபர்)

புங்குடுதீவில் நாய் ஒன்றை கைக்கோடரியினால் கொலை செய்த முதன்மைச் சந்தேக நபர் தலைமறைவாகியிருந்த நிலையில், நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

அவர் ஊர் காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நாய் ஒன்றை கைக்கோடரியினால் வெட்டி கொடூரமாகக் கொலைசெய்யும் காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகியது. இச்சம்பவம் புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 மற்றும் 35 வயதுடைய இருவர் இந்த மாத ஆரம்பத்தில் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

நாயை வெட்டிக் கொல்ல பயன்படுத்திய கைக்கோடரி மற்றும் அதனை சாணொளி எடுத்த அலைபேசி என்பவற்றை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

"போதைப்பொருளுக்கு அடிமையாகியதால் ஊரில் திருட்டுகளில் ஈடுபட்டோம். எம்மைக் கண்டவுடன் நாய் குரைத்து காட்டிக்கொடுத்துவிடும். இதனால் அங்கு இடம்பெறும் திருட்டுகளுடன் எமக்குத் தொடர்பு உண்டு என பொலிஸார் விசாரணைக்கு அழைப்பார்கள். அதனால்தான் அந்த நாயைக் கொலை செய்தோம்.

கைக்கோடரியினால் வெட்டிக் கொலைசெய்தவர் அன்றையதினம் போதையில் இருந்தார். சில நாட்களுக்கு முன்பாகவே நாயை கொலை செய்துவிட்டோம்.

அதன் சாணொளி சோதரனின் அலைபேசியில் இருந்தது. அந்தக் காணொளி தவறுதலாக ரிக்ரொக்கில் பதிவேற்றப்பட்டுவிட்டது" என்று காணொளியை பதிவெடுத்தவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

சந்தேக நபர்களை சட்ட மருத்துவரின் முன் முற்படுத்தி அறிக்கை பெற்றபின் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில், முதன்மைச் சந்தேக நபர் கிளிநொச்சியில் தலைமறைவாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முதன்மை சந்தேக நபர் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவர் மிருகவதைச் சட்டத்தின்கீழ் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது பிணை வழங்க மறுத்த மன்று 14 நாட்களுக்கு சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்த கொடூரச் சம்பவம் சமூக மட்டத்தில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்திய நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகேயின் உத்தரவில் நாயைக் கொலை செய்தவர் மற்றும் உடந்தையாக இருந்தோர் மீது மிருகவதைச் சட்டத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கிளிநொச்சியில் சர்வதேச பொறியியல் மாநாடு

(கிளிநொச்சி நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல்நகர் பொறியியல் பீட வளாகத்தில் முதலாவது பொறியியல் மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் ஒன்பது நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள் கலந்து கொண்டு தங்களது ஆய்வுகளை சமர்ப்பிக்கவுள்ளனர் என பொறியியல் பீட பேராசிரியர் அ.அற்புதராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் வெளிநாடுகளிலுள்ள பல பல்கலைக்கழகங்களிலிருந்து வருகின்றவர்கள் மற்றும் மாணவர்கள் இதன்மூலம் பயனை பெறக் கூடியதாக இருக்கும். இது ஒருவாய்ப்பாகவும் காணப்படுகிறது. அதாவது தங்களது கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வுகளை பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரு களமாக இந்த மாநாடு அமையவுள்ளது. இலங்கை மற்றும் சர்வதேச அபிவிருத்திகளை ஒரு நிலை பேறான அபிவிருத்தியாக கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும்.

இந்த பொறியியல் மாநாடு பல தொழிற் சாலைகள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவோடு இடம்பெறுகிறது. யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீடத்தின் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா, சீனா, ஹொங்கொங் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து வருகின்ற ஆய்வாளர்களும் இதில் பங்குபற்றுகின்றார்கள்.

இந்த பொறியியல் ஆய்வு மாநாட்டில் பல சமூக பிரச்சினைகளை பொறியியல் நோக்கோடு ஆய்வுசெய்து அவற்றுக்கு தீர்வுகளை காணவுள்ளனர். இதன்போது தெரிவு செய்யப்படுகின்ற சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் பிரகாசிக்கப்படவுள்ளன. இதற்காக பல முன்னணி பல்கலைக்கழகங்கள், பேராசிரியர்கள் ஆகியோர் உதவி செய்துள்ளனர்.

யாழில் அதிபர் தாக்கியதில் மாணவன் காயம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் பயிலும் 14 வயது மாணவன் அதிபரினால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளமை தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணை களை முன்னெடுத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் (15) கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நல்லூர் விநாயகர் வீதியைச் சேர்ந்த 14வயது மாணவனே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்.

தான்சென்ன பணியைச் செய்யவில்லை என்று தெரிவித்த அதிபர், மாணவனை கடுமையாகத் தாக்கினார் என்றும் மாணவனுக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டதுடன் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பொலிஸ் புலனாய்வுப் பிரிவும் இந்தச் சம்பவம் தொடர்பில் அறிக்கையிட்டுள்ளது.

பருத்தித்துறையில் தையல் கடை உரிமையாளர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(யாழ். நிருபர்)

யாழ். பருத்தித்துறை நகரில் உள்ள தையல் கடை ஒன்றுக்குள் முகமூடிகளுடன் நுழைந்த கும்பல் ஒன்று கடையை அடித்து நொருக்கியதுடன், உரிமையாளரை வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (15) இரவு மின்வெட்டு அமுலில் இருந்த சமயம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சபாலகுமார் (வயது 44) என்பவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட பகை காரணமாகவே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தெரிவித்துள்ள பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, யாழில் கடந்த ஓரிரு நாட்களில் 10இற்கும் மேற்பட்ட வாள்வெட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து முல்லையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

(முல்லைத்தீவு நிருபர்)

மண்ணெண்ணெய் தட்டுப்பாடு, இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகை, சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை போன்ற நிலைமைகள் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மீனவர்கள் தொடர்ச்சியாக பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், தாம் எதிர்கொள்ளும் நெருக்கடி நிலைமைகளைத் தீர்க்க உரியவர்கள் முன்வர வேண்டும் என வலியுறுத்தி ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று (16) மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

அந்தவகையில், மானிய விலையில் மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் மற்றும் படகுவெளியிணைப்பு இயந்திரத்திற்கான ஒயில் வழங்குதல், தடையின்றி மீனவர்களுக்கான எரிபொருள் வழங்குதல், இந்திய இழுவைப் படகின் வருகையைக் கட்டுப்படுத்தல், கடந்த மூன்று மாதங்களாக தொழிலின்றிப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நஷ்டஈடு வழங்குதல், சட்டவிரோத மீன்பிடித் தொழிலை தடைசெய்தல் போன்ற ஐந்து அம்சக் கோரிக்கைகள் மீனவர்களால் முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக முல்லைத்தீவு - புனித இராஜப்பர், ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பமான இவ்வார்ப்பாட்டப் பேரணியானது, தொடர்ந்து பேரணியாக முல்லைத்தீவு மாவட்டம்வரை சென்றது. இவ்வார்ப்பாட்டப் பேரணியில் பெருந்திரளான மீனவர்கள் கலந்துகொண்டிருந்ததுடன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

அத்தோடு, மீன்பிடிப் படகுகளும் உழவியந்திரங்களில் ஏற்றப்பட்டு மீனவர்களால் பேரணியாக எடுத்துவரப்பட்டன. குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி மாவட்டசெயலகத்தினை வந்தடைந்ததும், மீனவர்களின் ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்தவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மின்சக்தி வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, முல்லைத்தீவு மாவட்டசெயலர் கதிர்காமுத்தம்பி விமலநாதன் ஆகியோருக்குரிய மகஜர்கள் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் மீனவர்களால் கையளிக்கப்பட்டது.

அவ்வாறு மீனவர்களால் கையளிக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, எமது மாவட்டத்தில் 5ஆயிரம் மீனவக் குடும்பங்கள் கடற்றொழிலையே நம்பி தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதில் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் படகுத் தொழிலையே மேற்கொண்டுவருகின்றன.

கடந்த இரண்டு மாதங்களாக மண்ணெண்ணெய் வராத காரணத்தினால் தொழிலின்றி எமது மாவட்ட மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்களது பிள்ளைகளின் கல்வி, உணவு, ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கும் வருமானமின்றி மிகவும் துன்பப்படுகின்றனர். அத்துடன் எமது மாவட்ட கடல் எல்லைப்பரப்பில் இந்திய இழுவைப் படகுமூலம் இழுவை மடியினைப் பயன்படுத்தி தொழிலை மேற்கொள்வதால் எமது மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுவதுடன், எமது பகுதி மீன்வளமும் பாதிக்கப்படுகின்றது.

அதாவது, மீன்கள் உற்பத்தியாகும் பவளப் பாறைகள் fish bank அழிக்கப்படுகின்றன. இதனால் எமது எதிர்கால சந்ததியினரும் கடற்றொழில் செய்யமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே, எமது மாவட்ட மீனவ மக்களின் இந்நிலையினைக் கருத்திற்கொண்டு குறித்த ஐந்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு முல்லைத்தீவு மாவட்ட மீனவமக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகங்களும் விரைவில் ஆரம்பம்

பல்கலை மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

நாட்டில் அனைத்து பல்கலைக்கழகங்களையும் விரைவில் மீள ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களையும் ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை அனைத்து உப வேந்தர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.

உப வேந்தர்களின் கருத்துகளை கேட்டறிந்ததன் பின்னர் பல்கலைக்கழகங்களை மீளத் திறப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் கூறினார்.

மருத்துவ மற்றும் இணை சுகாதார பீடங்களின் செயற்பாடுகள் தற்போது இடம்பெறுவதாகவும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

ஏனைய பீடங்களை சேர்ந்த சில மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலேயே தங்கியிருந்தும், மேலும் சிலர் வீடுகளுக்குச் சென்றும் கற்றல் செயற்பாடுகளை தொடர்வதாகவும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் துப்பாக்கிச்சூட்டில் நபரொருவர் படுகாயம்

(ஜூட் சமந்த)

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டில் படுகாயங்களுக்குள்ளான நபரொருவர் சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 15ஆம் திகதி இரவு 11.00 மணியளவில் கருவலகஸ்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எரமுதுகஸ்யாய, வெல்லவாய பிரதேசத்தில் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கருவலகஸ்வெவ, குடாமெதவச்சிய பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.எம்.கபில சந்திக குமார (42 வயது) என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

எரமுதுகஸ்வெவ பிரதேசத்தில் இனந்தெரியாத நபரொருவர் தங்கியிருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய, அதுதொடர்பில் விசாரணைக்காக அங்கு சென்றதாக வனஜீவராசிகள் அதிகாரிகள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். அந்த சந்தர்ப்பத்தில் அங்கிருந்த நபரொருவர் தம் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும், தமது பாதுகாப்புக்காக முதலில் வானத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மீண்டும் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும், ஆனால் அங்கிருந்தவர்களை இலக்கு வைத்து அந்த துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை என்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பல திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடைய ஐவர் வெவ்வேறு இடங்களில் கைது

சந்தேக நபர்களிடமிருந்து 23 வாகனங்கள் மீட்பு

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிவேரிய பிரதேசத்தில் ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டு, முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணையின் போது, நாட்டின் பல பிரதேசங்களில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் திருட்டு உள்ளிட்ட பல திருட்டுச் சம்பவங்களுடன் சந்தேக நபர்களுக்கு தொடர்புள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து, மேலும் மூவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜா-எல, பியகம, கடவத்தை, களனி, யக்கல, மஹபாகே, பேலியகொடை, மீகஹவத்தை, ராகம மற்றும் வெலிவேரிய ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடனும் குறித்த சந்தேகநபர்களுக்கு தொடர்புள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் வசமிருந்த 2 முச்சக்கரவண்டிகள், 10 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 11 சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

யாழில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் பாரவூர்திகளுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை

(சாவகச்சேரி நிருபர்)

யாழ். மாவட்டத்திற்கான அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டு வருகின்ற பாரவூர்திகளுக்கு தேவையான எரிபொருளை யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (16) மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் வர்த்தக கழக பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து யாழ். மாவட்டத்திற்கான அத்தியாவசிய பொருட்களை எடுத்துவர வாராந்தம் குறைந்தது 20 பாரவூர்திகள் ஈடுபடுத்தப்படுவதாகவும் அதற்கு தேவையான எரிபொருட்களை QR முறையில் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்நிலையில், வர்த்தக அமைச்சின் பரிந்துரைக்கு அமைவாக யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக குறித்த அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுவரும் பாரவூர்திகளுக்கு தேவையான டீசலை வழங்கி அத்தியாவசிய பொருட்களை இலகுவாக எடுத்துவர மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் அங்கஜன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறு அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் பாரவூர்திகளுக்கான எரிபொருளை ஒதுக்கும் பட்சத்தில் பொருட்களின் விலை குறைவடையும் என வர்த்தக கழகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த நடைமுறை உடனடியாக நடைமுறைக்கு வரும் அதேவேளையில் எதிர்வரும் 28ஆம் திகதிக்குப் பின்னர் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் பிரதேச செயலகங்கள் ஊடாக QR முறையில் தமது சேவைக்கு தேவையான எரிபொருட்களை சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெறக்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை 10 மடங்காக அதிகரிப்பு

நாட்டில் கடந்த 4 மாதங்களை விடவும் தற்போது கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 10 மடங்கு அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சூழலில் சுகாதார வழிமுறைகளை கடுமையாக பின்பற்ற வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

129 கொவிட் தொற்றாளர்கள் நேற்று முன்தினம் (15) அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மொத்த கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 6இலட்சத்து 68ஆயிரத்து 141ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் 3 கொரோனா மரணங்கள் பதிவாகிய நிலையில், கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 16ஆயிரத்து 624ஆக அதிகரித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு வழமைக்குத் திரும்பியதால் சைக்கிள் விற்பனை வீழ்ச்சி; விலையும் குறைந்தது

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு சாதாரண நிலைமைக்கு திரும்பியுள்ளதால் சைக்கிள் விற்பனைகள் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளன. சைக்கிள் இறக்குமதியாளர்கள் மற்றும் உதிரிப்பாக விற்பனையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் ரிஸ்னி இஸ்மத் இதனைத் தெரிவித்துள்ளார்.

சைக்கிளின் விற்பனைகள் வீழ்ச்சியடைந்துள்ளதால், அதன் விலைகளும் வெகுவாக குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தொழிலுக்குச் செல்வோர் என அனைவரும் சைக்கிளை பயன்படுத்த ஆரம்பித்ததால், நாட்டில் சைக்கிளுக்கான கேள்வி அதிகரித்து காணப்பட்டது.

இதன்காரணமாக சைக்கிளின் விலைகள் சடுதியாக அதிகரித்திருந்ததுடன் அதற்கான தட்டுப்பாடுகளும் ஏற்பட்டிருந்தன. தற்போது, தட்டுப்பாடு இன்றி எரிபொருள் கிடைக்கின்றமையால் சைக்கிளின் பயன்பாடு குறைடைந்துள்ளதாக சைக்கிள் இறக்குமதியாளர்கள் மற்றும் உதிரிப்பாக விற்பனையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

திகதி 15.08.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4848
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 8,099,060.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 35,845,740.60
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 4 8 9 2 5 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3090
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,899,300.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 04 29 55 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 69,379,262.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1307
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,220,380.00
வெற்றி இலக்கினம் ஆம்பம் வெற்றி இலக்கங்கள் 5 7 5 8 8 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,616,553.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 878
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,268,380.00
M வெற்றி இலக்கினம் 11 57 70 75 வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 121,453,394.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 157
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,815,820.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 08 43 44 55
விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,757,032.40

தனிவி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1196
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,045,720.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 265,850,534.00
M 11 31 32 60 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேவுமாலிய N.W.L முதலீடு மாவத, கொழும்பு 01

கல்முனையில் அனைத்து மாட்டிறைச்சி கடைகளிலும் விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்த அறிவுறுத்தல்

மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டதையடுத்து, அனைத்து மாட்டிறைச்சி கடைகளிலும் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தும் நடவடிக்கை நேற்று (16) முன்னெடுக்கப்பட்டது.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீபின் விசேட பணிப்பின்பேரில், மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது மறு அறிவித்தல்வரை குறித்த விலைப்பட்டியல் தொடர்ந்தும் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் உரிய கட்டுப்பாட்டு விலை மீறப்பட்டு, அதிகரித்த விலை விற்கப்படுமாயின், எவ்வித முன்னறிவித்தலுமின்றி குறித்த கடைகள் மாநகர சபையினால் இழுத்து மூடப்படும் எனவும் வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

அதேவேளை, மாட்டிறைச்சிக் கடைகளில் டிஜிட்டல் தராசு பயன்படுத்துவதற்கு இருவார கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதுடன், எதிர்வரும் 01.09.2022ஆம் திகதிமுதல் டிஜிட்டல் தராசு பயன்படுத்தத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை எல்லையினுள் 35 மாட்டிறைச்சி கடைகள் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

ஹெரோயின் – போலி ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

ஹெரோயின் மற்றும் போலி நாணயத்தாள்களை தம்வசம் வைத்திருந்தவரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றையடுத்து நேற்று முன்தினம் (15) நள்ளிரவு கல்முனை காஸீம் வீதியில் வைத்து சந்தேகநபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் 39 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், சந்தேகநபர் வசமிருந்து 5000 ரூபா போலி நாணயத்தாள்கள் மூன்று, ஹெரோயின் போதைப்பொருள் 3 கிராம் 100 மில்லிகிராம் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சோதனை நடவடிக்கையின்போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிவலெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சர் டி.சி.வேவிடிவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர்களான எச்.ஜி.பி.கே.நிசங்க மற்றும் பண்டார உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட் பண்டார, பொலிஸ் கன்ஸ்டபிள் பிரபாத் வாகனச்சாரதி ஜயரட்ண இற்படிவடிக்கையை முன்னெடுத்து சந்தேகநபரை கைதுசெய்தனர்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட நபரை சான்றுப் பொருட்களுடன் கல்முனை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தினர்.

30 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு

(செங்கலடி நிருபர்)

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி கிராமத்தில் மிகவும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்ப மொன்றிற்கு லண்டனை தளமாகக்கொண்டு இயங்கும் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையினரால் வீடு உட்பட 30 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதாரத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

களுவன்கேணி கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் வசிப்பதாக லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையினிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் கிராமிய சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளியான கிருஸ்ணபிள்ளை நிமலேஸ்வரி குடும்பத்திற்கு 30 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் கலந்துகொண்டு வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வேல் பரமதேவா மற்றும் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்களான நாகராஜா ஆனந்தராஜா, லோகநாதன் அனோஜன் ஆகியோர் இணைந்து வாழ்வாதார உதவிகளை வழங்கினர்.

வசிப்பதற்கான வீடு, வாழ்வாதாரத்திற்கு ஆடுகள், கோழிகள், தாராக்கள் வளர்ப்பதற்கான நிரந்தரமான கூடு, தொழில்புரிவதற்காக சைக்கிள் என்பன வழங்கப்பட்டன.

வீட்டு உரிமையாளருக்கு கடந்த காலத்தில் மீன்பிடித்தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக பெறப்பட்ட கடனினைச் செலுத்துவதற்காக 50 ஆயிரம் ரூபா பணமும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பனை கைப்பணிப்பொருள் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சிநெறி வழங்க திருமலையில் கலந்துரையாடல்

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பத்தினிபுர கிராமத்தில் பனைப்பொருள் ஊடான உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சிநெறி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டலுக்கிணங்க குறித்த பயிற்சிநெறி நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் பனை பொருள் கைப்பணியாளர் சங்க அங்கத்தவர்களுக்காக நேற்று முன்தினம் (15) பத்தினிபுரம் கிராம அபிவிருத்தி சங்க கட்டிடத்தில் இடம்பெற்றது.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் கும்பிய வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு பிரம்புசார் உற்பத்தியில் ஈடுபடும் பென் தொழில் முயற்சியாளர்களுக்காக இவ் இலவச பயிற்சிநெறி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்று. குறித்த பகுதியில் பனை உற்பத்திசார் கைப்பணிப் பொருட்கள் உள்ளிட்ட சந்தைப்படுத்தல் நிலையமும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் தேசிய அருங்கலைப் பேரவையின் உதவி மாகாணப் பணிப்பாளர் பொன்கரன், கிராமவேகர் நேசராஜ்குமார், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தங்கருபன் உட்பட பென் பனை உற்பத்தியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கிண்ணியா நகர சபையின் வருமானத்தை அதிகரிக்க கொடுவா மீன் வளர்ப்புத் திட்டம்

(கந்தளாய் நிருபர்)

கிண்ணியா நகர சபைக்குட்பட்ட கட்டையாரு பொழுதுபோக்கு பூங்காவினுள் நிரந்தர வருமானம் தரக்கூடிய கருத்திட்டமான கொடுவா மீன் வளர்ப்பு திட்டம் ஒன்று நேற்று முன்தினம் (15) கிண்ணியா நகர சபைத் தவிசாளரின் முயற்சியினால் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இத்திட்டத்திற்கான முதலீட்டுச் செலவாக ஐந்து இலட்சம் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளதோடு, நிறுவனமொன்று நான்கு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும் கிண்ணியா நகர சபையின் தவிசாளர் முகம்மட் நிவாஸ் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் கிண்ணியா நகர சபையின் வருமானம் அதிகரிப்பதுடன் புதிய வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்த வழிசமைக்கும் என்பதில் எந்தவித சந்தேமுமில்லை எனவும் நகர பிதா தெரிவித்தார்.

குறிப்பிட்ட இந்நிகழ்வில் நகரசபையின் தவிசாளர், உறுப்பினர்கள் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மற்றும் நிறுவனத் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் நகர சபையின் செயலாளர் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலரும் பங்கேற்றனர்.

ஒலுவில் துறைமுக பணிகளை துரிதப்படுத்த அக்கரைப்பற்று முதல்வர் இயந்திரங்கள் கையளிப்பு

(பொலிவேரியன், மாளிகைக்காடு நிருபர்கள்)

ஒலுவில் துறைமுகவாயிலுள்ள மண்ணை சமநிலைப்படுத்துவதற்கு அக்கரைப்பற்று மாநகர சபையின் Excavator மற்றும் தெப்பம் போன்ற இயந்திரங்களை நேற்று (16) அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாவுல்லா அகமட் லஃபர் கையளித்தார்.

கடந்த ஒரு மாதகாலமாக ஒலுவில் மீனவர் துறைமுக வாயில் மண்ணை சமநிலைப்படுத்தும் பணிகள் நடைபெற்றுவரும் நிலையில், அம்பாறை மாவட்ட மீனவர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வேண்டுகோளை ஏற்று, அப்பணிகளை மேலும் துரிதப்படுத்த அக்கரைப்பற்று மாநகர சபை இவ்வுதவியைச் செய்வது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்த அம்பாறை மாவட்ட மீனவர்களின் நலன்கருதி இப்பாரிய வேலைத்திட்டத்தினை முன்னெடுக்க உதவிக்கரம் நீட்டிய அக்கரைப்பற்று மாநகர சபைக்கும், அதன் முதல்வர் அதாவுல்லா அகமட் லஃபிக்கும் அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப் படகுகள் உரிமையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.ஏ. நளீர் தமது அமைப்பின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார்.

இதன்போது அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.றியாஸ் உட்பட மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள், மாநகர சபை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

பாண்டிருப்பு மட்பாண்ட கைத்தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்திற்கு உதவுமாறு கோரிக்கை

(பாண்டிருப்பு நிருபர்)

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக சிறுகுடிசைக் கைத் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து நிர்க்கதிக் குள்ளாகியுள்ளனர். இதனால் தங்களது குடும்ப ஜீவியத்தை கொண்டுசெல்ல முடியாது வறுமையில் வாடுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு கிராமத்தில் பாரம்பரிய ரீதியாக மட்பாண்ட கைத்தொழிலில் பலர் ஈடுபட்டுவந்தனர். தற்போது இத்தொழிலிலை 55 குடும்பங்களே செய்துவருகின்றனர். நிலவும் பொருளாதார பிரச்சினை காரணமாக மட்பாண்டத்திற்குரிய மூலப்பொருட்களான களிமண், பட்டுமண், உமிமட்டை, வைக்கோல் உள்ளிட்ட பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், குறித்த பொருட்களின் விலையேற்றத்தினால் மட்பாண்ட தொழிலை கைவிடும் நிலைக்கு அவர்கள் வந்துள்ளனர்.

பாரம்பரியமாக மட்பாண்ட தொழிலையே தமது வாழ்வாதாரமாக செய்துவரும் குடும்பங்கள் பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக வேறு தொழிலுக்கும் செல்ல முடியாத தூர்ப்பாக்கிய நிலையில் அன்றாடம் குடும்ப ஜீவியத்தை நகர்த்த முடியாது மிகுந்த கஸ்டப்படுகின்றனர்.

அரசாங்கம் இவ்வாறான குடிசைக் கைத் தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுவதுடன், இத்தொழிலை மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என மட்பாண்ட கைத்தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாலமுனையில் காட்டு யானை அட்டகாசம்; பிரதேசவாசிகள் – விவசாயிகள் அசௌகரியம்

(பாலமுனை நிருபர்)

பாலமுனை வயல் மற்றும் குடியிருப்புப் பிரதேசங்களில் நாளாந்தம் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதனால் இப்பிரதேச விவசாயிகளும் பொதுமக்களும் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

தற்பொழுது நெல் அறுவடை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் காலைவேளைகளில் தமது விவசாய நிலங்களுக்கு செல்லமுடியாதவாறு வயல் நிலங்கள் முழுவதையுமே காட்டு யானைகள் ஆக்கிரமித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் வயல் நிலங்களுக்குள் உட்பிரவேசிக்கும் காட்டு யானைகள் விவசாயிகள் இளைப்பாறுவதற்காக அமைத்துள்ள ஓய்வு அரண்களையும் வயல் ஓரங்களில் காணப்படும் தென்னை மற்றும் நிழல்தரும் மரங்களையும் அழித்து துவம்சம் செய்துவருகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிறுபோக வேளாண்மைச் செய்கை அறுவடையில் ஈடுபட்டுவரும் நிலையிலேயே காட்டு யானைகளின் தொல்லை இவ்வாறு அதிகரித்து காணப்படுகின்றது. விவசாயிகள் தமது உயிரைப் பணயம் வைத்தே நெல் அறுவடை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு விவசாய நிலங்களுக்கு இரவுவேளையில் வரும் யானைகள் வயல் பிரதேசங்களை அண்டியுள்ள குடியிருப்புப் பிரதேசங்களுக்குள்ளும் உட்புகுந்து வீட்டுத்தோட்டப் பயிர்களையும் துவம்சம் செய்து வருகின்றன.

காட்டு யானைகளின் தொல்லையினாலும் அச்சத்தினாலும் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இரவுவேளைகளில் வீடுகளில் நிம்மதியாக உறங்குவதற்கும் முடியாதுள்ளது என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஒலுவில் துறைமுகம் மூடப்பட வேண்டும்; அஷ்ரப்பின் பெயர் சூட்டல் ஒரு சூழ்ச்சியே!

ஜனாதிபதி, அமைச்சர்களுக்கு கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி மகஜர்

(சாய்ந்தமருது நிருபர்)

ஒலுவில் துறைமுகத்துக்கு எம்.எச்.எம். அஷ்ரப்பின் பெயர் சூட்டப்பட்டிருப்பதானது ஒரு சூழ்ச்சியாகவே நோக்கப்படுகிறது. கல்முனை பிராந்தியத்தில் கடலரிப்பு ஏற்படுவதற்கும் கடற்றொழில் பாதிப்படைவதற்கும் முக்கிய காரணமாக அமைந்திருக்கின்ற இத்துறைமுகம், உடனடியாக இழுத்து மூடப்படவேண்டுமென கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, துறைமுக அபிவிருத்தி அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோருக்கு மகஜர் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அமைப்பின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், நாட்டினதும் பிராந்தியத்தினதும் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு ஒலுவில் துறைமுக நிர்மாணத் திட்டத்தை முன்மொழிந்திருந்தாலும், குறித்த கடற்பரப்பு துறைமுக அமைப்புக்கு பொருத்தமற்றது எனவும் அது வெற்றியளிக்காது இதனால் மீனவர் சமூகத்தினருக்கு பெரும் பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது எனவும் நிபுணத்துவ ஆய்வறிக்கை வெளிப்படுத்தியிருந்தது.

எனினும், அவை எதுவும் கருத்திற்கொள்ளப்படாமலேயே துறைமுக நிர்மாண வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்காக ஒலுவில் கிராமத்தில் நூற்றுக்கணக்கானோரின் குடியிருப்புக் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன. நீண்ட காலத்துக்குப் பின்னரே இவற்றுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டபோதிலும் காணிகளை இழந்தோர் எதிர்பார்த்த பெறுமதி வழங்கப்படாமல், ஏமாற்றப்பட்டிருந்தனர். இன்னும் சிலருக்கு இன்று வரை நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

இத்துறைமுக நிர்மாணத்தினால் நாட்டுக்கோ பிராந்தியத்திற்கோ சமூகத்திற்கோ இதுவரை எவ்வித பயனும் கிடைக்கவில்லை. மாறாக, தொடர்ந்தும் இழப்புகளையே சந்திக்க நேரிட்டுள்ளது. இதற்காக ஒரு கிராமம் காவு கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் தமது காணிகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்து, நிர்க்கதியடைந்திருப்பதுடன் பாரிய கடலரிப்புக்கும் வழிவகுத்திருக்கிறது.

காலத்துக்குக் காலம் பதவிக்கு வருகின்ற அரசுகளும் துறைமுக அமைச்சர்களும் இவற்றுக்கு தீர்வு வழங்குவதாகக் கூறி, அறிக்கைகள் வெளியிட்டு, மாறி மாறி கள விஜயங்கள் மேற்கொள்கின்றபோதிலும் மக்களுக்கு இன்னும் தீர்வு கிடைப்பதாக இல்லை.

இதனை வர்த்தக துறைமுகமாக இயக்க முடியாதெனத் தெரிவித்து, மீன்பிடித் துறைமுகமாக செயற்படுத்துவதற்கு கடந்த கோட்டாபய அரசாங்கத்தின் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டு, கடற்றொழில் அமைச்சின் கீழ் இத்துறைமுகம் கொண்டுவரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இங்கு விஜயம் செய்து, இத்துறைமுகத்திற்கு அஷ்ரப் ஞாபகார்த்த மீன்பிடித் துறைமுகம் என்று பெயர் சூட்டிவிட்டுச் சென்றுள்ளார்.

இத்துறைமுகத்திற்கு மறைந்த தலைவரான அஷ்ரப்பின் பெயரை சூட்டிவிட்டால் பிரச்சினைகள் எல்லாம் தாமாக தீர்ந்து விடுமா? இது மக்களை ஆசுவாசப்படுத்தி, திசைதிருப்பும் சூழ்ச்சியாகவே நோக்கப்படுகிறது. இவ்வாறான மாயைகளை விடுத்து, மக்களின் பிரச்சினைகளை உள்வாங்கி தூரநோக்குடன், ஆக்கபூர்வமாக சிந்தித்து, செயற்பட அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அவசரமாக முன்வர வேண்டும்.

வர்த்தக துறைமுகமாயினும் சரி, மீன்பிடித் துறைமுகமாயினும் சரி, இதன் அமைவிடம் துறைமுகத்திற்கு எவ்வகையிலும் பொருத்தமற்றதென்று நிரூபிக்கப்பட்டிருப்பதால், மக்களை இன்னுமின்னும் ஏமாற்றாமல் இதனை இழுத்து மூடுவது ஒன்றே தீர்வாக அமையும் என்ற யதார்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

இதன் மூலம் கடலரிப்பிலிருந்து இப்பிரதேசங்களை காப்பாற்ற முயற்சிக்கலாம். அத்துடன், மரபு ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவந்த கடற்றொழிலை மீளக் கட்டியெழுப்புவதற்கும் சாதகமான புறச்சூழல் ஏற்படும் என்பது மீனவர் சமூகத்தின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இவ்விடயங்களை குறித்த மகஜரில் சுட்டிக்காட்டியிருக்கிறோம் - என்றார்.

கிழக்கிலங்கை முஸ்லீம் முன்னணி
Eastern Muslim Alliance
නැගෙනහිර මුස්ලිම් පෙරමුණ

ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இராசிய தகவலின்படி உப பொலிஸ் பரிசோதகர் நூர்தீன் தலைமையிலான குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 120 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (15) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிண்ணியா கள்ளறப்பு விவசாயக் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுப்பு





(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் வேண்டுகோளுக்கிணங்க திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான ஜெயவிக்கிரம நேற்று முன்தினம் (15) கிண்ணியா கள்ளறப்பு பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள காணிகளைப் பார்வையிட்டார்.

மேலும் அப்பகுதியிலுள்ள விவசாயக் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

கள்ளறப்பு பிரதேசம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற காணியாகும். மாவட்ட அரசாங்க அதிபர் அப்பகுதி விவசாயிகளின் குறை, நிறைகளையும் கேட்டறிந்துகொண்டார்.

இவ்விஜயத்தின்போது கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, வனவளத் திணைக்கள அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டார்கள்.

போடியார் புலம்பல்!



சீனாவில இருந்து உணவுக்கப்பல் வந்தா பரவாய் இல்ல. ஆனால், வந்தது உளவுக்கப்பல் எலுவா..?

தெரியாமத்தான் கேக்கிறன். ஆர உளவு பாக்க அம்பாந்தோட்ட கடலுக்கு சீனாட கப்பல் வந்தது ..? ஒருவேள அம்பாந்தோட்டை துறை முகத்த இந்தியாட ஆதிக்கத்துக்க போக உடாம தடுக்கிற சங்கதிதான் இது போல...

இந்தியாவும், சீனாவும் நம்மட நாட்ட வாங்கித்தா ஒரு சோலியும் இல்ல!

கல்முனை பிராந்திய மீனவர்களின் எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு

(நாவிதன்வெளி நிருபர்)

அம்பாறை மாவட்ட மீனவர்கள் தற்போதைய சூழ்நிலையில் எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (15) கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

குறிப்பாக, கல்முனை பிராந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் பிரச்சினை சம்பந்தமாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸிடம் அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப்படகு மீனவர் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம்.எச்.எம் நஸீரினால் எடுத்துரைக்கப்பட்டது.

இதற்கமைவாக கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களிலுள்ள குறிப்பிட்ட 05 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விசேடமாக வாரத்தில் 07 நாட்களும் டீசலை வரவழைத்து, அதனை மீனவர்களுக்கு மாத்திரம் முன்னுரிமைப்படுத்தி வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன் தீர்வு பெற்றுத்தருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் உறுதியளித்தார்.

இக்கலந்துரையாடலில் அம்பாறை மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஸ்ரீரஞ்சன், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

65 லீற்றர் பெற்றோலுடன் கிண்ணியாவில் மூவர் கைது

(கிண்ணியா நிருபர்)

சட்டவிரோதமாக பெற்றோல் ஏற்றிச்செல்ல முயன்ற மூன்று பேரையும் முச்சக்கரவண்டியுடன் நேற்று முன்தினம் மாலை (15) கிண்ணியா பொலிஸார் கைதுசெய்துள்ளதாக தெரிவித்தனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் வைத்து இவர்கள் போக்குவரத்து பொலிஸாரால் சோதனையிடப்பட்டபோது கைதுசெய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக வியாபார நோக்கில் கிண்ணியா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து மட்டக்களப்பு பகுதிக்கு எடுத்துச்செல்லப்படவிருந்த மூன்று கலன்களும் மற்றும் போத்தல்களிலும் பெற்றோல்களை சட்டவிரோதமாக நிரப்பி ஏற்றிச் செல்ல முற்பட்டபோது கிண்ணியா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். 65 லீற்றர் பெற்றோல் இதனுடன் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் கொண்டுவருவதுடன், இவர்களை நீதிமன்றில் ஆஜர்செய்ய வழக்கும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபைக்கு புதிய வண்ணக்கர்மார் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தேசமகா சபையின் தீர்மானத்திற்கமைய இந்நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது. புதிய வண்ணக்கர் தலைவராக கலிங்குலத்தைச் சேர்ந்த இ.மேகராசா, செயலாளர் வண்ணக்கராக படையாட்சி குடியைச் சேர்ந்த சி.கங்காதரன், வண்ணக்கர் பொருளாளராக உலகிப்போடி குடியைச் சேர்ந்த ச.கோகுலகிருஸ்ணன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அதேவேளை, கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 29/08/2022 அன்று திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து குடித்திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 11/09/2022 திகதி ஞாயிற்றுக்கிழமை தேரோட்டமும், அதனைத் தொடர்ந்து வேட்டைத் திருவிழாவும் இடம்பெற்று, 12/09/2022 திகதி திங்கட்கிழமை பெருமானின் தீர்த்தோற்சவத்துடன் இவ்வாண்டிற்கான மகோற்சவம் இனிதே நிறைவடையவுள்ளது.

அம்பாறை இளைஞர் - யுவதிகளுக்கு வன்முறை தீவிரவாதத்தைத் தவிர்ப்போம் என்ற தொனிப்பொருளில் செயலமர்வு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய சமாதானப் பேரவையுடன் அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகம் இணைந்து அம்பாறை மாவட்ட இளைஞர், யுவதிகளுக்காக இடம்பெற்ற "வன்முறை தீவிரவாதத்தைத் தவிர்ப்போம்" எனும் தொனிப்பொருளில் அமைந்த செயலமர்வு அக்கரைப்பற்றில் அண்மையில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகத்தின் செயலாளர் ஐ.எல்.ஹாசிம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதியாக அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தின் சமாதானக் கல்வி இணைப்பாளர் எஸ்.எம்.றுமைஸ் மற்றும் வளவாளர்களாக அம்பாறை மாவட்ட செயலகத்தின் சகவாழ்வு உத்தியோகத்தர் பி.பிரதீஸ்கரன், ஆசிரியை எம்.எச்.ஜிப்ரியா, கே.எம்.பியோமி ரெட்டிகோ, எஸ்.எல்.முஹம்மட் நாசீம் ஆகியோர் கலந்துகொண்டு வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதில் இளைஞர், யுவதிகளின் திறனை விருத்திசெய்ய அறிவுரை வழங்கினர்.

இதன்போது வன்முறை தீவிரவாதத்தின் வரைவிலக்கணம், வன்முறைக்குத் தள்ளுதல், வன்முறைத் தீவிரவாதத்தின்பால் கவரும் காரணங்கள் போன்ற தலைப்புகளில் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விரிவுரைகள் நடைபெற்றன.

எதிர்காலத்தில் மாவட்ட இளைஞர் சம்மேளனத்துடன் இணைந்து வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகத்தின் செயலாளர் ஐ.எல்.ஹாசிம் தெரிவித்தார்.

இதில் அம்பாறை மாவட்ட இளைஞர் சம்மேளன மற்றும் சகவாழ்வு சங்கங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்கள் பங்குபற்றியிருந்தனர்.

விசேட தேவையுடைய மாணவர்களின் சாரணிய பயிற்றுவிப்பாளர் நியமனம்

(மட்டக்களப்பு நிருபர்)

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சாரணியர் பயிற்சிகளை வழங்கி சாரணிய திட்டத்தில் உள்வாங்கும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 விசேட தேவையுடைய பாடசாலைகளிலிருந்து 25 ஆசிரியர்கள் தெரிவுசெய்து பயிற்சியளிக்கப்பட்டனர்.

பயிற்சிநெறிக்காக கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட காவத்தமுனை விசேட தேவையுடையோர் பாடசாலையிலிருந்து ஆசிரியர் எம்.யூ.எம்.சனூஸ் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு YMCA நிலையத்தில் இரு நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சிநெறியில் மாவட்ட சாரணர் ஆணையாளர் பிரதீபன் பயிற்சிநெறியில் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிவைத்ததுடன், விஷேட தேவையுடைய மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்றுவிப்பாளராக

காவத்தமுனை விசேட பாடசாலை ஆசிரியர் எம்.யூ.எம்.சனூஸ் நியமனத்தையும் வழங்கினார்.

குறித்த நியமனத்தைப் பெற்றுக்கொண்ட எம்.யூ.எம்.சனூஸ் ஆசிரியருக்கு காவத்தமுனை விசேட பாடசாலை நிர்வாகத்தினர் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கின்றனர்.

உலக செய்திகள்

ஆங் சான் சூகிக்கு மேலும் ஆறு ஆண்டுகள் சிறை

மியன்மார் அரசின் முன்னாள் தலைமை ஆலோசகரான ஆங் சான் சூகிக்கு மேலும் 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அந்த நாட்டு இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மியன்மரின் மனித உரிமை போராளி என்று அறியப்படும் 77 வயதான ஆங் சான் சூகி கடந்த ஆண்டு பெப்ரவரி முதல் வீட்டுச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கொரோனா விதிய மீறியதாக 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை, தேசத் துரோக வழக்கில் 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை என மொத்தம் 15 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது.

2015இல் தனது கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது, அறக்கட்டளைக்கு கட்டணம் கட்டுவதற்கு அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, அரச நிலத்தை அபகரித்தனர் என்பது இராணுவம் தொடர்ந்த மற்றொரு வழக்கு.

இந்த வழக்கில் நேற்றுமுன்தினம் தீர்ப்பளிக்கப்பட்டது. அதன்படி சூகிக்கு கூடுதலாக மேலும் 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 1962ஆம் ஆண்டுமுதல் 50 ஆண்டுகள் இராணுவ ஆட்சி நடைபெற்ற மியன்மாரில், இராணுவத்திற்கு எதிராக போராடிய ஆங் சான் சூகி, ஏற்கனவே 21 ஆண்டுகள் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவராவார். 2015இல் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்ததும் அங்கு தேர்தல் நடத்தப்பட்டது. அதில் அமோக வெற்றிபெற்று சூகியின் கட்சி ஆட்சி அமைத்தது. 2019ஆம் ஆண்டு நவம்பரில் நடத்தப்பட்ட தேர்தலில் மீண்டும் மிகப்பெரிய வெற்றியை சூகி பெற்றார். ஆனால், தேர்தலில் முறைகேடு நடந்ததாக குற்றஞ்சாட்டிய இராணுவம் மக்களாட்சியை மீண்டும் கவிழ்த்ததோடு, சூகியை 2021ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதிமுதல் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கருணை கொலைசெய்யப்பட்ட 'பெலுகா' திமிங்கலம்!

ஆற்றுக்குள் வழிதவறி வந்த திமிங்கலத்தை பலவேறு முயற்சிகள் மேற்கொண்டபோதும் முடியாததால் கருணை கொலைசெய்த நிகழ்வு பிரான்ஸில் நடந்துள்ளது.

பரிஸ் நகரில் ஆர்டிக் கடல்பரப்பை நோக்கிச் சென்ற பெலுகா வகையைச் சேர்ந்த திமிங்கலமொன்று வழிதவறி செயின் ஆற்றுக்குள் புகுந்தது. கடல்நீரில் வசித்துவந்த திமிங்கலம் நன்னீருக்கு வந்ததால் உணவின்றி தவித்து வந்தது. இதனால் அதன் உடல் எடை குறைந்தது. தொடர்ந்து உயிருக்குப் போராடி வந்துள்ளது.

இந்நிலையில், குறித்த அந்த திமிங்கலத்தை கடலில் விட அதிகாரிகள் மற்றும் விலங்கு நல ஆர்வலர்கள் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் பலனளிக்கவில்லை. இறுதி முயற்சியாக 700 கிலோ எடை கொண்ட அந்த திமிங்கலத்தை இராட்சத வலை மூலம் பிடித்து கென்டெய்னர் லொரியில் வைத்து சுமார் 160 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஒரு உப்புநீர் ஏரியில் விட முயன்றனர். ஆனால், செல்லும் வழியிலேயே திமிங்கலத்திற்கு மூச்சுத்தினறல் ஏற்பட்டு துடிதுடித்ததால் அதனை கால்நடை மருத்துவர்கள் கருணை கொலை செய்துள்ளனர்.

லண்டன் வீதிகளில் உலவும் டுபாய் இளவரசர்

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இளவரசரான ஷேக் ஹம்தன் பின் முகமத் அல்-மக்தூம் லண்டனில் வீதிகளிலும், பொதுப் போக்குவரத்துகளிலும் சுற்றித் திரியும் புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள மன்னர்கள், இளவரசர்கள் என்றால் பொது உலகப் பார்வையில் ஒரு பிம்பம் எப்போதும் தோன்றும். அதனை உடைப்பதற்கான நடவடிக்கைகளில் சில அரபு நாடுகள் சமீபகாலமாக ஈடுபட்டு வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் ஐக்கிய அரபு இராச்சியம். இங்கு மற்ற அரபு நாடுகளை ஒப்பிடும்போது கட்டுப்பாடுகள் குறைவு என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், ஐக்கிய அரபு இராச்சியத்தின் இளவரசரான ஷேக் ஹம்தன் பின் முகமத் அல்-மக்தூம் தனது அரச குடும்பம் தொடர்பான சில வரைமுறைகளை அவ்வப்போது தகர்த்து நவீன நாகரிக உடைகளில் வலம் வருபவர்.

அந்த வகையில் ஷேக் ஹம்தன் பின் முகமத் அல்-மக்தூம் தனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் இணைந்து லண்டனுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் பொதுமக்கள் மத்தியில் சாதாரண உடைகளில் உலாவும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. இப்புகைப்படங்களை இளவரசரே தனது இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார். தற்போது அந்தப் புகைப்படங்கள்தான் வைரலாகி வருகின்றன. ஷேக் ஹம்தன் பின் முகமத் அல்-மக்தூம் இன்ஸ்டாவில் 14 மில்லியன் பேர் பின்தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க எம்.பிக்கள் குழு விஜயம்

தாய்வான் எல்லையில் சீனா மீண்டும் போர்ப் பயிற்சி

அமெரிக்க எம்.பிக்களின் தாய்வான் விஜயத்தால் ஆத்திரமடைந்துள்ள சீனா மீண்டும் போர்ப் பயிற்சியை தொடங்கியுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி கடந்த 3ஆம் திகதி சீனாவின் எச்சரிக்கையை மீறி தாய்வானுக்குச் சென்றார்.

தாய்வானுக்கு உரிமை கொண்டாடிவரும் சீனா, ஆத்திரமடைந்து தாய்வான் நீரிணை உட்பட 6 முக்கிய பகுதிகளில் போர் விமானங்கள், போர்க் கப்பல்களுடன் 10 நாட்கள் ஏவுகணைத் தாக்குதல் உள்ளிட்ட தீவிர கூட்டு இராணுவ போர்ப் பயிற்சியில் ஈடுபட்டது.

தற்போது நான்சி பெலோசி தாய்வானிலிருந்து அமெரிக்காவுக்கு திரும்பி இரண்டு வாரங்கள் கடந்துள்ள நிலையில், மாசசூசெட்ஸ் தொகுதியைச் சேர்ந்த ஜனநாயகக் கட்சி சென்ட் சபை உறுப்பினர் எட் மார்கே தலைமையிலான எம்.பிக்கள் ஐவர் உள்ளடங்கிய குழு, இரண்டு நாட்கள் பயணமாக தாய்வான் தலைநகர் தைபேவுக்கு ஞாயிற்றுக்கிழமை சென்றது.

முன்னறிவிப்பின்றி திடீரென மேற்கொள்ளப்பட்ட அந்த சுற்றுப்பயணம், தாய்வானுக்கு அமெரிக்காவின் ஆதரவை மீண்டும் உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்படுவதாக அந்தக் குழு தெரிவித்தது.

மேலும், இக்குழுவானது தாய்வான் தலைவர்களை சந்தித்து வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தியது. அடுத்த சில வாரங்களில் தாய்வான் நீரிணைக்கு போர்க் கப்பல்கள், போர் விமானங்களை அனுப்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்க எம்.பிக்கள் குழுவின் வருகையால் ஆத்திரமடைந்த சீனா, தற்போது தய்வானை சுற்றிவளைத்து மீண்டும் தீவிர போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. அதனால் தென்சீனக் கடற்பகுதியில் மீண்டும் போர் மேகம் சூழ்ந்துள்ளது.

மர்மங்களுடன் தொடரும் நேதாஜியின் மரணம்

அவரது அஸ்தியை இந்தியாவுக்கு கொண்டுவந்து ஆய்வுக்குட்படுத்துமாறு அனிதா போஸ் கோரிக்கை

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் அஸ்தியை இந்தியாவுக்கு எடுத்து வர மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவரது மகள் அனிதா போஸ் தெரிவித்துள்ளார்.

நேதாஜியின் மரணம் குறித்து தற்போது வரை பல தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கடந்த 1945 ஒகஸ்ட் 18ஆம் திகதி தாய்வானில் நடந்த விமான விபத்தில், நேதாஜி உயிரிழந்தார் என்று நம்பப்பட்டாலும், அவரது மரணம் இன்று வரை மர்மமாகவே உள்ளது.

இந்நிலையில், அவரது ஒரே மகளான அனிதா போஸ்,

''டோக்கியோவிலுள்ள ரென்கோஜி கோவிலில் வைக்கப்பட்டுள்ள நேதாஜியின் அஸ்தியை இந்தியாவுக்கு எடுத்துவர மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவரது மகள் அனிதா போஸ் தெரிவித்துள்ளார்.

நேதாஜியின் மரணம் குறித்து தற்போது வரை பல தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கடந்த 1945 ஒகஸ்ட் 18ஆம் திகதி தாய்வானில் நடந்த விமான விபத்தில், நேதாஜி உயிரிழந்தார் என்று நம்பப்பட்டாலும், அவரது மரணம் இன்று வரை மர்மமாகவே உள்ளது.

இந்நிலையில், அவரது ஒரே மகளான அனிதா போஸ்,

''டோக்கியோவிலுள்ள ரென்கோஜி கோவிலில் வைக்கப்பட்டுள்ள நேதாஜியின் அஸ்தியை இந்தியாவுக்கு கொண்டுவந்து மரபணு சோதனைக்கு உட்படுத்த வேண்டும். அப்போதுதான், என் தந்தையின் மரணம் குறித்து இன்னும் சந்தேகம் உள்ளவர்களுக்கு உண்மையான விபரம் தெரியவரும்'' - என்றார்.

இது தொடர்பில் அனிதா போஸ் மேலும் கூறிவிக்கையில்,

''என் தந்தைக்கு நம் நாட்டின் சுதந்திரத்தை விட அவரது வாழ்க்கையில் எதுவும் முக்கியமாக இருந்ததில்லை. அந்நிய ஆட்சியில்லாத இந்தியாவில் வாழ அவர் ஏங்கினார். ஆனால், சுதந்திரத்தின் மகிழ்ச்சியை அவரால் அனுபவிக்க முடியவில்லை. அதனால், குறைந்தபட்சம் அவரது அஸ்தியையாவது இந்திய மண்ணுக்கு எடுத்துவர வேண்டிய நேரம் இது.

அவரது அஸ்தியை தர ரென்கோஜி கோவில் நிர்வாகமும், ஜப்பானிய அரசும் ஒப்புக்கொண்டுள்ளன. எனவே, இந்த விடயத்தில் மத்திய அரசு, உடனடியாக நல்ல முடிவெடுத்து, அவரது அஸ்தியை எடுத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.''

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கச்சதீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த...

இராமேஸ்வரம் மீனவர்களை விரட்டியடித்த இலங்கை கடற்படை

ஜி.பி.எஸ். கருவிகளும் பறிப்பு

கச்சதீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களின் வலைகளை சேதப்படுத்திய இலங்கை கடற்படை, ஜி.பி.எஸ். கருவிகளை பறித்துச் சென்றுள்ளமையானது அப்பகுதி மீனவர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 500இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். அவர்கள் நேற்றுமுன்தினம் இரவு கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர், மீனவர்களை விரட்டியடித்துள்ளனர்.

மேலும், வலைகளை சேதப்படுத்தி மீனவர்கள் வைத்திருந்த 4 ஜி.பி.எஸ். கருவிகளை பறித்துச் சென்றுள்ளனர். இதனால் பாதியிலேயே இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுக் காலை கரை திரும்பியுள்ளனர்.

இலங்கை கடற்படையினர் அவ்வப்போது இவ்வாறு தாக்குதலில் ஈடுபடுவது மீனவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை கடற்படையினரின் இதுபோன்ற தாக்குதல்களை தடுத்து நிறுத்த ஒன்றிய, மாநில அரசுகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ருஷ்டி மீதான தாக்குதலுக்கும் ஈரானுக்கும் தொடர்பில்லை

எழுத்தாளர் சல்மான் ருஷ்டி தாக்கப்பட்ட விவகாரத்தில் ஈரானுக்கு தொடர்பில்லை என அந்நாட்டின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

'சாத்தானின் கவிதைகள்' என்ற புகழ்பெற்ற புத்தகத்தை எழுதிய சல்மான் ருஷ்டி கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக மரணதண்டனை அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வந்தார். கடந்த சில தினங்களுக்கு முன்னர், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்த நிகழ்வொன்றில் பங்கேற்ற அவரை ஹாதி அத்தர் என்ற இளைஞர் கத்தியால் குத்தினார். இதில் ருஷ்டியின் கை நரம்பு, கண், கல்லீரல் உள்ளிட்ட உறுப்புகளில் காயம் ஏற்பட்டது. தற்போது ருஷ்டி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். ருஷ்டி மீதான தாக்குதலுக்கு ஈரான் மீது சில நாடுகள் குற்றஞ்சாட்டின.

இந்நிலையில், ருஷ்டி மீதான தாக்குதலுக்கும் ஈரானுக்கும் தொடர்பில்லை என அந்நாட்டின் வெளியுறவு அமைச்சு செய்தி தொடர்பாளர் நசார் கானானி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், ''சல்மான் ருஷ்டி அமெரிக்காவில் தாக்கப்பட்டதற்கு அவரும் அவரது



ஆதரவாளர்களுமே காரணம். இந்த விவகாரத்தில் ஈரானை குற்றஞ்சாட்டுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. இது தொடர்பாக அமெரிக்க ஊடகங்களில் வெளியான செய்திகளை விட கூடுதல் தகவல்கள் ஈரானிடம் இல்லை. தாக்கியவரின் செயலைக் கண்டிப்பதாக கூறி, மேற்கத்திய நாடுகள் இஸ்லாமிய நம்பிக்கைகளை இழிவுபடுத்துவது முரண்பாடான செயல்'' - என்று தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தங்கள் போக்கை மாற்றவேண்டும்

ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தல்

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றி ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், தலிபான்கள் தங்கள் போக்கை மாற்ற வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஓராண்டில் மனிதாபிமான நிலைமை மோசமடைந்துள்ளதாகவும், மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல் தெரிவித்துள்ளார்.

பெண்கள், சிறுமிகள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜேர்மன் எல்லையையொட்டிய போலந்தின் நதியில் நதி நீரில் ஏற்பட்டுள்ள மாசுபாட்டால் தொன் கணக்கிலான மீன்கள் உயிரிழந்த நிலையில் நீரில் மிதக்கின்றன. இந்தப் பிரச்சினையால், அந்த நதி நீரை யாரும் பயன்படுத்த வேண்டாம் என போலந்து அரசு எச்சரித்துள்ளது. நதி நீரில் மாசு ஏற்பட்டதற்கான காரணங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

தவிசாளர் - பிரத்தியேக உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு விபரத்தை வெளியிட மறுக்கும் மேல் மாகாண சபை

தகவல்களை மறுக்கும் உரிமை அரச நிறுவனங்களுக்கில்லை என தகவலறியும் ஆணைக்குழு அறிவிப்பு

(றிப்தி அலி)

கலைக்கப்பட்டுள்ள மேல் மாகாண சபையின் தவிசாளருக்கும் அவருடைய பிரத்தியேக உத்தியோகத்தர்களுக்கும் மாகாண சபையினால் மாதாந்தம் வழங்கப்படுகின்ற கொடுப்பனவு தொடர்பான முழு விபரத்தினையும் வழங்குமாறு தகவலறியும் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

மேல் மாகாண சபையின் பேரவைச் செயலகத்திற்கு இந்த உத்தரவு கடந்த புதன்கிழமை (10) ஆணைக்குழுவினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 7ஆவது பிரிவில் "மாகாண சபை கலைக்கப்படும் போதெல்லாம், கலைத்தலின் பின்னர் சபையின் முதலாவது கூட்டத்துக்கு நேர்முன்னர் வரை தவிசாளர் தமது பதவியை வறிதாக்குதலாகாது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சரத்திற்கமைய, கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் தவிசாளர்கள் தற்போது வரை பதவியில் உள்ளனர். இதன் காரணமாக நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் கலைக்கப்பட்டுள்ள மாகாண சபையின் தவிசாளர்களுக்கும் அவர்களுடைய பிரத்தியேக உத்தியோகத்தர்களுக்கும் கோடிக்கணக்கான ரூபாக்களை அரசு செலவளிக்கின்றது.

இந்த நிதித் தொகை தொடர்பில் ஆராயும் நோக்கில் நாட்டிலுள்ள ஒன்பது மாகாண சபைகளினதும் பேரவைச் செயலகங்களிற்கு கடந்த ஒக்டோபர் 10ஆம் திகதி தகவலறியும்

எட்டு மாகாண சபைகள் பதில் வழங்கிய நிலையில், மேல் மாகாண சபை மாத்திரம் கலைக்கப்பட்ட மாகாண சபையின் தவிசாளர் மற்றும் அவரது பிரத்தியேக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பள விபரங்களை வழங்க மறுத்து விட்டது.

"2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தின் 5ஆவது பிரிவின் முதலாவது உப பிரிவின் (அ) மற்றும் (ஓ) ஆகிய பிரிவின் கீழ் இந்த தகவல்களை வழங்க முடியாது" என மேல் மாகாண சபையின் பேரவைச் செயலகத்தின் தகவல் அதிகாரியும், நிர்வாக உத்தியோகத்தருமான எச்.எச்.ஏ.என். நெலும்மல்லியினால் கடந்த வருடம் நவம்பர் 16ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

"தகவலானது, பாரிய பகிரங்க அக்கறை அத்தகைய தகவலின் வெளிவிடுகையை நீதி முறைப்படுத்தினாலொழிய அல்லது சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மதமளித்திருந்தாலொழிய, ஏதேனும் பகிரங்க தொழிற்பாடு அல்லது அக்கறைக்கு தொடர்பல்லாததாகவுள்ள அல்லது தனியாளின்



அந்தரங்கத்தன்மையின் அனுமதிக்கப்படாத வரம்பு மீறலைச் செய்யக்கூடிய தனிப்பட்ட தகவலின் வெளிவிடுகையுடன் தொடர்புறுகின்ற விடத்து" தகவலறிவதற்கான உரிமை மறுக்கப்படலாம் என இச்சட்டத்தின் 5ஆவது பிரிவின் 1ஆவது உப பிரிவின் (அ)வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று "அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது, நாடாளுமன்றத்தின் அல்லது சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மாகாண சபையொன்றின் சிறப்புரிமைகளின் மீறலாக உள்ளவிடத்து" தகவலறிவதற்கான உரிமை மறுக்கப்படலாம். குறித்த சட்டத்தின் 5ஆவது பிரிவின் 1ஆவது உப பிரிவின் (ஓ)வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிராகரிப்பு தொடர்பில் மேல் மாகாண சபையின் பேரவைச் செயலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியான பேரவைச் செயலாளர் யூ.வீ. ரோஹன ராஜபக்ஷவிடம் கடந்த வருடம் டிசம்பர் 02ஆம் திகதி மேன்முறையீடு செய்யப்பட்டது.

எனினும், மாகாண சபையின் பேரவைச் செயலாளரினால் கடந்த வருடம் டிசம்பர் 8ஆம் திகதி குறித்த மேன்முறையீடும் நிராகரிக்கப்பட்டது. இந்த நிராகரிப்பு தொடர்பில் கடந்த வருடம் டிசம்பர் 22ஆம் திகதி தகவலறியும் ஆணைக்குழுவில் மேன் முறையீடு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த மேன் முறையீடு தொடர்பான விசாரணை கடந்த புதன்கிழமை (10) கொழும்பு – 07, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலுள்ள தகவலறியும் ஆணைக்குழுவில் நடைபெற்றது.

தகவலறியும் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபரசர் உபாலி அபேயரத்ன தலைமையில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான ஓய்வுபெற்ற நீதியரசர் ரோஹினி வல்கம, சட்டத்தரணி கிஷாலி பின்டோ ஜயவர்த்த மற்றும் சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி ஆகியோர் முன்னிலையில் இந்த மேன்முறையீடு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தகவலறியும் சட்டத்தின் 5ஆவது பிரிவின் 1ஆவது உப பிரிவின் (அ) மற்றும் (ஓ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலறிவதற்கான உரிமையினை மறுப்பதற்கான சிறப்பு உரிமையினை பயன்படுத்தி மேல் மாகாண சபையின் தவிசாளருக்கும் அவருடைய பிரத்தியேக உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படுகின்ற கொடுப்பனவு தொடர்பான விபரங்களை வழங்காதிருக்க மாகாண சபையின் பேரவைச் செயலகம் முயற்சிக்கின்ற விடயம் அவதானிக்கப்படுவதாக தகவலறியும் ஆணைக்குழு இதன்போது தெரிவித்தது.

அத்துடன், கோரப்பட்ட தகவல்களை வழங்கும் விடயத்தில் மேல் மாகாண சபையின் பேரவைச் செயலகம் செயற்பட்ட விதம் மிகவும் வருத்தத்தினை ஏற்படுத்துகின்றது எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டது.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மேற்குறிப்பிட்ட சரத்துகளின் பிரகாரம் தகவல்களை வழங்காமல் நிராகரிப்பதற்கான எந்த அதிகாரமும் மேல் மாகாண சபையின் பேரவைச் செயலகத்திற்கில்லை எனவும் ஆணைக்குழு கட்டிக்காட்டியது.

இதனால், மேல் மாகாண சபையின் பேரவைச் செயலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியான சபை செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினை ஆணைக்குழு நிராகரிப்பதுடன் விண்ணப்பதாரியினால் வேண்டப்பட்ட தகவல்களை எதிர்வரும் செப்டெம்பர் 9ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறும் ஆணைக்குழு உத்தரவிட்டது. அத்துடன் குறித்த தகவலின் பிரதியை ஆணைக்குழுவிற்கு வழங்குமாறும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மேற்குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் இத்தகவல் வழங்க மேல் மாகாண சபையின் பேரவைச் செயலகம் தவறும் பட்சத்தில், 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தின் 39ஆவது பிரிவிற்கமைய நீதவான் நீதிமன்றின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நான்கு கால்களுடன் பிறந்த கோழிக்குஞ்சு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் நான்கு கால்களுடன் கோழிக் குஞ்சொன்று பிறந்துள்ளது. ஆனால், பிறந்து நான்கு நாட்களில் உயிரிழந்துவிட்டதாக அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

அச்சுவேலி காலனை பகுதியிலுள்ள வீடு ஒன்றில் கடந்த புதன்கிழமை கோழிக்குஞ்சு ஒன்று நான்கு கால்களுடன் பிறந்துள்ளது.

மகாராஜா கொளி என்ற குடும்பப் பெண், கோழி வளர்ப்பினையே ஜீவனோபாயமாக கொண்டு கோழிகளை வளர்த்து வருகின்றார்.

அவர் அண்மையில் 10 முட்டைகளை வாங்கி கோழி ஒன்றில் மூலம் அடைகாத்துள்ளார். அதில் ஆறு குஞ்சுகள் பொரித்துள்ளன. இறுதியாக பொரித்த குஞ்சு நான்கு கால்களுடன் பிறந்துள்ளது.

ஏனைய கோழிக் குஞ்சுகளைப் போல குறித்த கோழிக் குஞ்சும் சுறுசுறுப்பாக இருந்துள்ளது. பிரதேச மக்களும் அதனை பார்வையிட்டு வருகின்றனர். இந்நிலையில், அந்தக் கோழிக்குஞ்சு கடந்த 15ஆம் திகதி உயிரிழந்துள்ளது.

நெல் வயல்களை சேதப்படுத்தும் காட்டு யானைகள்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - வன்னாத்தவில்லு, எலுவாங்குளம் பகுதியில் காணப்படும் விவசாய நிலங்களை காட்டு யானைகள் தொடர்ச்சியாக துவம்சம் செய்து வருவதாக அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வன்னாத்தவில்லு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட எலுவங்குளம், தவுசம்பு, கம்பியடித்துண்டு மற்றும் குத்தடிவெளி ஆகிய பகுதிகளில் 750இற்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விவசாயத்தை நம்பி வாழும் இந்தப் பகுதி மக்கள் வங்கிகளில் கடன்களைப்பெற்றும், தங்க நகைகளை அடகு வைத்தும் வழமைபோல இம்முறையும் வேளாண்மை பயிர்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் எலுவங்குளம் பகுதி விவசாயிகள், நெற்பயிர்ச் செய்கைக்குத் தேவையான உரம் உள்ளிட்ட பசளை இன்மை, பசளைகளின் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்தே தாம் இம்முறை நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில், ஒவ்வொரு நாளும் மாலை வேளைகளில் 5 மணிக்குப் பின்னர் காட்டு யானைகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்ச்செய்கைகளை துவம்சம் செய்து வருவதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

கடன்களை பெற்று செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்ச் செய்கையை ஒரே இரவில் வந்து யானைகள் துவம்சம் செய்வதால் தமது வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்படுவதாக எலுவங்குளம் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னர் ஒரு யானைகளே வந்துசென்றிருந்த நிலையில், தற்போது கூட்டம் கூட்டமாக யானைகள் வயல்வெளிக்கு வருகை தந்து பயிரை முற்றாக சேதப்படுத்திவிட்டு சென்றுவிடுகின்றன என விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளபோதிலும், இதுவரை யானைகளை கட்டுப்படுத்த எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என எலுவங்குளம் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். எனவே, இந்த விடயம் சம்பந்தமாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதுடன், மீதமுள்ள பயிர்களையும் யானைகள் அழிப்பதற்கு நாசப்படுத்துவதற்கு முன் யானை வேலிகளை அமைத்துத்தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

அரச நிறுவனத் தலைவர்கள் தொடர்பான புதிய நியமனங்களுக்கு சரியான காரணங்கள் தேவை

முன் அனுமதி பெற விசேட குழுவை நியமித்தார் ஜனாதிபதி

அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளில் புதிய நியமனங்கள் அல்லது மாற்றங்களுக்கு, முன் அனுமதி பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையிலான குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பிரதமரின் செயலாளர் அநுர திசாநாயக்க, அமைச்சரவை செயலாளர் டபிள்யூ.எம்.டி.ஜே. பெர்னாண்டோ ஆகியோர் செயற்படுவார்கள்.

இந்தக் குழுவின் செயலாளராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சமித்த குலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் பதவிகளில் மாற்றம் செய்ய வேண்டுமாயின், நியாயமான காரணங்களுடன் இந்தக் குழுவிடம் பரிந்துரைகளைச் சமர்ப்பித்து முன் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மு ன் உடன்பாடுகளின்றி, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளில் மாற்றம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் அவ்வப்போது விடுக்கப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கைகள் மற்றும் சில முறைசாரா நியமனங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலாளரின் கையொப்பத்துடன் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் நேற்றுமாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சுக்கும் இக்கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோத எரிபொருள் வியாபாரம்:

13,200 லீற்றர் பெற்றோலுடன் சந்தேகநபர்கள் எழுவர் கைது

(ஜோட் சமந்த)

சட்டவிரோதமாக, எரிபொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் 07பேர் 13ஆயிரத்து 200லீற்றர் பெற்றோலுடன் ஆனமடுவ மற்றும் புத்தளம் பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் (15) முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மீன் ஏற்றிச்செல்லும் லொறியொன்றில் 4ஆயிரம்லீற்றர் எரிபொருளை எடுத்துச்சென்ற சந்தேகநபர்கள் நால்வர் புத்தளம் பொலிஸ் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் புத்தளம், கல்லடி பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பெற்றோல் தொகையை நுரைச்சோல வரையில் எடுத்துச் சென்றுகொண்டிருந்ததாக கைதுசெய்யப் பட்டுள்ள சந்தேகநபர்கள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, 9ஆயிரத்து 200லீற்றர் பெற்றோலுடன் சந்தேகநபர்கள் ஐவர் ஆனமடுவ பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆனமடுவ, தொனிலை பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, இந்த 13ஆயிரத்து 200லீற்றர் பெற்றோல் சிபெட்கோ நிறுவனத்தின் எரிபொருள் பகிர்ந்தளிக்கும் பவுசரினூடாக ஆனமடுவ பிரதேசத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த எரிபொருள் தொகை ஆனமடுவ, தொனிலை பிரதேசத்தில் அமைந்துள்ள பாழடைந்த இடமொன்றில் வைத்து பிளாஸ்டிக் பீப்பாய்களுக்கு நிரப்பிக்கொண்டிருந்த நிலையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு எரிபொருள் வியாபாரத்தை முன்னெடுத்து நபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் மற்றும் ஆனமடுவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கம்பளையில் ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸ்

(பேருவளை நிருபர்)

கம்பளை நகரில் ராஜசிங்க மாவத்தையில் அமைந்துள்ள செய்ஹ் சம்ஸ் அல் பாலி ஸாவியாவில் வருடாந்தம் நடைபெற்றுவரும் ஷாதுலிய்யா மனாகிப் தமாம் வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (21) மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளது. ஞஹர் தொழுகையை தொடர்ந்து துஆ, ஹழ்ரா, முஸாக்கரா நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாத்தறை மின்னதுல் பாலியா அரபுக் கல்லூரி முதல்வர் உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம். இஸ்திகார் ஆலிம் (பாரி,) முஸாக்கரா நிகழ்த்துவார் என கம்பளை ஸாவியா செயலாளர் மூத்த ரயீஸில் முகத்தமுஷ் ஷாதுலி எம்.எஸ்.எம். ஸாபிர் தெரிவித்தார்.

முகத்தமுஷ் ஷாதுலி எம்.யூ.எம். இப்றாஹிம் ஹாபிஸ் தலைமையில் தொடர்ந்து, 07 நாட்கள் மனாகிப் மஜ்லிஸ் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

களுத்துறை மாவட்டத் தமிழ்த் தினப் போட்டிகள்

(பேருவளை நிருபர்)

களுத்துறை மாவட்டத்தின் 2022ஆம் ஆண்டுக்கான தமிழ்த் தினப் போட்டிகள் களுத்துறை வலயத் தமிழ்ப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான முஹம்மட் இல்யாஸ் மற்றும் சின்னய்யா ஜெயகுமார் ஆகியோரின் தலைமையில் இரண்டு கட்டங்களாக நடைபெற்று கொண்டிருக்கின்றன.

களுத்துறை வலயத்தில் நடைபெறும் போட்டிகளின் விபரம் வருமாறு,

முதற்கட்டமாக தமிழ்த் தின எழுத்தறிவுப் போட்டிகள் அனைத்தும் கடந்த 10ஆம் திகதி நான்கு மத்திய நிலையங்களில் நடைபெற்றன. இப்போட்டிகளை வலயத்தின் ஆசிரிய ஆலோசகர்கள் மேற்பார்வை செய்து நடத்தி வைத்தனர்.

களுத்துறை ஆண்கள் மத்திய கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளில் 06 பாடசாலைகளும், பேருவளை சீனங்கோட்டை அல்-ஹுதைமலரா தேசிய கல்லூரியில் 07 பாடசாலைகளும், பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் 05 பாடசாலைகளும், தர்காநகர் ஸாஹிராக் கல்லூரியில் 03 பாடசாலைகளும் பங்குபற்றின.

இப்போட்டிகளை அதிபர்களான அன்வர், புகாரி மொகமட், முஹம்மட், மூமினா, பாரிஹா, நவ்பில், நிஹான், ரபீக் மொஹிடீன், லக்வான் ஆகியோர் மேற்பார்வை செய்தனர்.

இரண்டாம் கட்டமாக தமிழ்த் தின வாய்மொழிப் போட்டிகள் எதிர்வரும் 25ஆம் திகதி களுத்துறை மத்திய கல்லூரியில் நடைபெறும்.

உக்ரைன் நிதி திரட்டும் போட்டியில்
பெலாரஸ் வீராங்கனை

உக்ரைனுக்கான விழிப்புணர்வு, மனிதாபிமான உதவிகளை மேம்படுத்தும் ஒரு திட்டமான அமைதிக்கான டென்னிஸ் விளையாட்டுகளின் ஒரு பகுதியாக ரஃபேல் நடால், கோகோ காஃப், இகா ஸ்விடெக் ஆகியோருடன் பெலாரஷ்ய டென்னிஸ் வீராங்கனை விக்டோரியா அசரென்கா, அமெரிக்க ஓபன் கண்காட்சி போட்டியில் இணையவுள்ளார்.

யு.எஸ். ஓப்பனுக்கு முன்பாக நடைபெறும் கண்காட்சிப் போட்டி உக்ரைனின் சுதந்திர தினமான ஒகஸ்ட் 24 அன்று நியூயார்க் நகரிலுள்ள லூயிஸ் ஆம்ஸ்ட்ரோங் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விம்பிள்டனைப் போலல்லாமல், பெலாரஸ், ரஷ்யாவைச் சேர்ந்த மற்ற அனைத்து விளையாட்டு வீரர்களுடன் யு.எஸ். ஓப்பனில் போட்டியிட அசரென்கா அனுமதிக்கப்படுகிறார். இருப்பினும், அவர்களின் தேசியக் கொடிகள், சின்னங்கள் ஆகியவை தடைசெய்யப்பட்டுள்ளன.

ரஷ்யப் படையெடுப்பால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனில் உள்ள சமூகங்கள் மற்றும் மில்லியன் கணக்கான உக்ரேனிய அகதிகள் வெளியேறிய சுற்றுப்புறப் பகுதிகளுக்கு ஆதரவளிக்க இந்தப் பணம் பயன்படுத்தப்படும்.

உக்ரைனிலுள்ள எங்கள் நண்பர்களுக்கு மிகவும் தேவையான கைகொடுக்க எங்கள் விளையாட்டு ஒன்றுமிரண்ட விதத்தில் நான் பெருமைப்படுகிறேன். அதேபோல், யு.எஸ். ஓப்பனின் உலகளாவிய தளத்தை எங்களால் வழங்குவதற்கான முயற்சியை மேம்படுத்த முடிந்ததில் நான் பெருமைப்படுகிறேன், மேலும் உக்ரைன் மக்களுக்கு அவர்களின் நேரத்தில் நாங்கள் அவர்களுடன் நிற்கிறோம் என்பதைக் காட்டுவதற்கு தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்'' என்று மைக் நைல்ரி கூறினார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

இரண்டு இலட்சம் டொலர்களுக்கு
சுப்பர் கிங்ஸ் அணியில் ஒப்பந்தமான தீக்ஷன

ஆறு அணிகள் பங்கேற்புடன் தென்னாபிரிக்காவில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறவுள்ள சி.எஸ்.ஏ. ரி20 லீக் தொடரில் பங்கேற்கும் ஜொஹன்னஸ்பேர்க் சுபர் கிங்ஸ் அணியில் இலங்கை சுழற்பந்துவீச்சாளர் மஹீஷ் தீக்ஷன இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை உரிமையாளர்கள், ஜொஹன்னஸ்பேர்க் சுப்பர் கிங்ஸ் அணியை வாங்கியுள்ளனர். இந்நிலையில், வீரர்கள் ஏலத்துக்கு முன்னர் நேரடி ஒப்பந்தங்களை ஒவ்வொரு அணிகளும் அறிவித்து வருகின்றன. அதன்படி தங்களுடைய 5 நேரடி ஒப்பந்த வீரர்களை ஜொஹன்னஸ்பேர்க் சுப்பர் கிங்ஸ் அணி அறிவித்துள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் வீரர் பெப் டு பிளெசிஸ் ஜொஹன்னஸ்பேர்க் சுப்பர் கிங்ஸ் அணிக்காக நேரடியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அவரே அணியின் தலைவராக செயற்படுவார் எனத் தெரிகிறது. மேலும், இலங்கை வீரர் மஹீஷ் தீக்ஷன, இங்கிலாந்தின் மொயீன் அலி, மேற்கிந்திய தீவுகளின் ரொமாரியோ ஷெப்பர்ட் மற்றும் தென்னாபிரிக்காவின் புதுமுக வேகப்பந்துவீச்சாளர் ஜெரால்ட் கோட்ஸி ஆகியோர் நேரடியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒப்பந்தம் செய்யப்பட்ட 5 வீரர்களில் பெப் டு பிளெசிஸ், மொயீன் அலி மற்றும் மஹீஷ் தீக்ஷன ஆகியோர் ஏற்கனவே சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடியுள்ளனர். பெப் டு பிளெசிஸிற்கு 3 இலட்சத்து 75 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் ஒப்பந்தத்தொகையாக வழங்கப்படவுள்ளது. அதேநேரம், மொயீன் அலிக்கு 4 இலட்சம், மஹீஷ் தீக்ஷனவுக்கு 2 இலட்சம், ரொமாரியோ ஷெப்பர்டுக்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் மற்றும் ஜெரால்ட் கோட்ஸிக்கு 5ம் ஆயிரம் அமெரிக்க டொலர்கள் என வழங்கப்படவுள்ளன.

எஸ்.எல்.சி. இன்விடேஷனல் ரி20 லீக் - 2022
சம்பியன் பட்டம் வென்ற மெண்டிஸின் ரெட்ஸ் அணி

எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகும் ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர் மற்றும் ஒக்டோபர் மாதம் ஆஸி.யில் ஆரம்பமகின்ற ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடர் ஆகியவற்றுக்காக பலமான இலங்கை அணியை உருவாக்கும் நோக்கில் இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'எஸ்.எல்.சி இன்விடேஷனல் ரி20 லீக் - 2022' தொடரில் குசல் மெண்டிஸ் தலைமையிலான ரெட்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

நான்கு அணிகள் பங்கேற்ற குறித்த தொடரில் புள்ளிப்பட்டியலில் முதலிரு இடங்களைப் பெற்ற ரெட்ஸ் மற்றும் ப்ளூஸ் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற ரெட்ஸ் அணி பந்துவீசை தெரிவுசெய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய ப்ளூஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களை எடுத்துக்கொண்டது.

137 என்ற இலகு வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ப்ளூஸ் அணி 16.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 137 ஓட்டங்களுடன் வெற்றியிலக்கை அடைந்தது. தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதை குசல் மெண்டிஸ் பெற்றுக்கொள்ள, தொடரின் சிறந்த பந்துவீச்சாளருக்கான விருதை சுழற்பந்துவீச்சாளர் பிரவீன் ஜெயவிக்ரமவும், தொடர் ஆட்டநாயகன் விருதை வேகப்பந்துவீச்சாளர் அசித்த பெர்னாண்டோவும் பெற்றுக்கொண்டனர்.

அர்ஜுனவிடம் 2 பில்லியன் நஷ்டஈடு கோரும்
இலங்கை கிரிக்கெட் நிறுவனம்

தேசிய விளையாட்டுப் பேரவையின் தலைவர் அர்ஜுன ரணதுங்க அண்மையில் ஊடகம் ஒன்றின்போது வெளியிட்ட இழிவான மற்றும் திரிபுபடுத்தப்பட்ட அறிக்கை குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இலங்கை கிரிக்கெட் சபையின் செயற்குழுவிற்கு எதிராக தவறான மற்றும் அவதூறான குற்றச்சாட்டுகளை முன்வைத்து, இலங்கை கிரிக்கெட்டின் நல்லெண்ணம் மற்றும் நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும் வகையில், தீங்கிழைக்கும் நோக்கத்துடன் பேசி, வேண்டுமென்றே பகிரங்க கருத்துகளை வெளியிட்ட அர்ஜுனவுக்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை கிரிக்கெட் தீர்மானித்துள்ளது.

அதன்படி செயற்குழு உறுப்பினர்கள், அர்ஜுன ரணதுங்கவுக்கு கோரிக்கை கடிதங்களை அனுப்பி, பொய்யான மற்றும் இழிவான அறிக்கையின் மூலம் இலங்கை கிரிக்கெட் மற்றும் அதன் அதிகாரிகளுக்கு ஏற்பட்ட நற்பெயர் இழப்புகளுக்கு 2 பில்லியன் நஷ்ட ஈடாக கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியக் கிண்ணப் போட்டிகளை நடத்துவதற்கான உரிமம் இலங்கையிடம் இருந்தபோதும் அதனை நடத்தாமல், ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு வழங்கியதன் மூலம் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தவறிழைத்திருப்பதாக அர்ஜுன ரணதுங்க அண்மையில் கருத்து தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் தேசிய விளையாட்டுப் பேரவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் அர்ஜுன ரணதுங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் உரிமத்தை
தற்காலிகமாக இரத்துச்செய்த பிபா

17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர் ஒக்டோபர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

2 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டி முதல் முறையாக இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இந்திய உதைபந்து கூட்டமைப்பின் உரிமத்தை சர்வதேச உதைபந்து பேரவை (பிபா) தற்காலிகமாக இரத்துசெய்துள்ளது.

உதைபந்து கூட்டமைப்பில் தேர்தல் நடத்தி புதிய நிர்வாகிகள் நியமிக்கப்படாததால் உரிமம் இரத்துசெய்யப்பட்டுள்ளது. புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டால் மீண்டும் உரிமம் வழங்கப்படும் என பிபா அறிவித்துள்ளது. மேலும், வரும் ஒக்டோபர் மாதம் இந்தியாவில் நடக்கவிருந்த மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடரையும் இடமாற்றம் செய்ய பிபா முடிவு செய்துள்ளது.

கிழக்கு மாகாண சம்பியனான திருமலை மாவட்ட அணி

(தியாஸ் இல்மாயில்)

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாவட்டங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் திருகோணமலை மாவட்டம் கிழக்கு மாகாண சம்பியனாகி தேசிய போட்டிக்கு தெரிவாகியது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.எம்.நௌபீலின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கமைவாகவும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் வீரர்கள் பங்குகொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியும், திருகோணமலை மாவட்ட அணியும் மோதின. 15 ஓவர் கொண்ட இச்சுற்றுப்போட்டியில் நாணய சுழச்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை மாவட்ட அணி 13.4 ஓவரில் சகல விக்கெட்டுகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட அணியினர் 13.5 ஓவர் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 46 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

இதன் மூலம் திருகோணமலை மாவட்ட அணி, இவ்வாண்டுக்கான கிழக்கு மாகாண சம்பியனாகி தேசிய கிரிக்கெட் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் இடத்தை மட்டக்களப்பு மாவட்ட அணி தனதாக்கிக்கொண்டது.

இறுதிநிகழ்வில் அம்பாறை மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஐ.எம்.அமீர் அலி உட்பட கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருது பிளைங்கோர்ஸ் அணிக்கு வெற்றி

(கல்முனை நிருபர்)

கல்முனை ஜெனஸ்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திக்கின்ற ரி20 கிரிக்கெட் தொடரின் குழுநிலை போட்டியில் சாய்ந்தமருது பிளைங்கோர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கல்முனை ரிஜோன் விளையாட்டுக் கழகம் அண்மையில் கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் எதிர்த்தாடியது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கல்முனை ரிஜோன் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 91-9 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்தாடிய சாய்ந்தமருது பிளைங்கோர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 16.3 ஓவர்களில் 92-5 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை அமினாஸ் ஜுவலரி நிறுவனத்தின் பிரதமர் நிறைவேற்றுப் பணிப்பாளரும், சமூக செயற்பாட்டாளரும், முகாமைத்துவப் பட்டதாரியுமான முஹமட் கியாஸ் கலந்து சிறப்பித்து, போட்டியின் ஆட்ட நாயகனுக்கு விருது வழங்கி கௌரவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7